May 1933


3L
M24,M22SN
N33-6.7
186925

௨

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.




...CE OF THE REGISTRAR OF ...
16 FEB 1934


# சிவநேசன்

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.


ஆண்டு ௬. § ஆங்கீரச-பங்குனி 1933-மார்ச் § திங்கள் ௮.


உள்ளுறை. பக்கம்.


| | | |
|---|---|---|
| ௧. | மூர்த்திதலம் தீர்த்தம் முறையாத் தொடங்குகள் | 281 |
| ௨. | மகாமக மான்மியம். | 283 |
| ௩. | ஆசார்ய மகிமை. | 286 |
| ௪. | திருஞானசம்பந்தரும் உரோமச முனிவரும் | 289 |
| ௫. | சிவபெருமான் சர்வ வியாபகர். | 292 |
| ௬. | வெங்காரம் வெய்தெனினும் நோய்தீர்க்கும். | 294 |
| ௭. | மணிமேகலை. | 306 |
| ௮. | பெரியார் அருட்செயலும் காந்தியார் மருட்செயலும். | 313 |
| ௯. | மதிப்புரை. | 317 |
| ௰. | ஆடுகோழிகளைத் தாயலறப் பிள்ளையலறப் பலியிடாதீர்கள். | 319 |
| ௧௧. | சங்கரலிங்க உலா. | |



ஆசிரியர் ராம. து. ராம. இராமசாமி செட்டியார்,

பலவான்குடி.



சென்னைப் பதிவு எண் 2302.

# செய்தித் திரட்டு.

**உள்ளூர்:—** மாசி ௨௭வ சதுர்த்தசி மகாமக நன்னாள் குமாரவிநாயகர் திருக்கோயிலில் நடராஜர் அபிடேகம் நடைபெற்றது.

கருப்பன்செட்டியார் மானநஷ்ட வழக்கு:- தேவகோட்டை முன்சீப் கோர்ட்டு 1929-ம் ௵ O. S. 183 விசாரணை 7—3—1933ல் தொடங்கியது. வாதி அன்று சீப் விசாரிக்கப்பட்டு, அன்றும் அடுத்த நாளும் குறுக்குக் கேள்விகள் சில கேட்கப்பட்டார். மீட்டும் 23—3—1933 குறிக்கப்பட்டிருக்கிறது.

சில வெறியர்கள் தம் பகைமை காரணமாகப் பிறரைத் தூறுதலாகப் பேசி வம்பளப்பதோ டமையாது, தமக் கனுகுணமாக வியபிசாரிகளைக் கூட்டிக் குடிவைத்துக்கொண்டு வழிச்செல்வோரை வம்பிழுக்கவும் செய்கின்றனர்.

**குன்றக்குடி:—** குமாரக் கடவுளுக்கு இம்மதி ௧௮வ உத்தரத் திருநாளுக்குக் காப்புக்கட்டி, ௨௬வ தேர்த்திருவிழாவும், ௨௭வ மயிலாடுபாறை மண்டபப்படியும் நடைபெறும்.

**ஆத்தங்குடி:—** இவ்வூரில் யூனியன் பஞ்சாயத்தும், கக்ஷிப் பிரதிகக்ஷிகளும் உண்டாயிருக்கின்றன.

**மாசி மகோற்சவம்:—** ஒன்பது நகரக் கோயில்களுள் ஒன்றாகிய மாற்றூர்க் கோவிலிலும், கல்லல் நகர சிவாலயத்திலும், திருக்கோஷ்டியூர்ப் பெருமாள்கோவிலிலும் இனிது நிறைவேறியது.

**திருத் தென்குடித்திட்டை:—** இவ்வூரில் யூனியன் பஞ்சாயத்து அமைந்து, அங்கத்தினர்கள் தேர்ந்து, பட்டாமணியம் திரு. சேஷாத்திரி ஐயங்கார் தலைவராகவும், திரு. ஆர். வரதாச்சாரியார் உபதலைவராகவும் நியமனம் பெற்றுள்ளார்கள். செலவுக்காகத் தஞ்சைத் தாலூக்காபோர்டிலிருந்து வருஷவாரி ரூபா முந்நூறு உதவ இசைந்துள்ளார்கள்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற இத் திருத்தல சிவாலயத்தில், மாசி ௨௭வ சதுர்த்தசி மாமகத் திருநாளில், கிராமக்கர்ணம் திரு. பாலசுப்பிரமணிய ஐயர் நடராஜருக்கு அபிடேக ஆராதனை நன்கு நடத்திவைத்தார்கள்.

**கூடலையாற்றூர்:—** தேவாரம் பெற்ற இத் திருத்தலத்தில் மாசி ௧௭வ தொடங்கி ௨௬வ வரை மகோற்சவத்தை ஷை தேவஸ்தான பரம்பரை விசாரணைதாரராகிய தேவகோட்டைத் திருவாளர் ராம. அரு. அரு. ராம. அருணசலஞ் செட்டியார் வழக்கம்போற் சிறப்பாக நடத்தி வைத்தார்கள்.

**கிட்டா:—** மலாயாவிலுள்ள இந் நகர்த் தண்டாயுதபாணிக்குத் தனவணிக நகரத்தார்கள், மாசி ௨௭வ மகாமகோற்சவமும், அன்றும் அடுத்த நாளும் அபிடேக ஆராதனை மகேசுவர பூஜை, சர்வாபரணலங்கிருதராய்ச் சுவாமி மயில்வாகனக் காட்சி யாகியவைகளும் மகா சம்பிரமமாக நடத்தினார்கள்.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகர் குருபூஜை:—** சென்னை, சூளை, லட்சுமி நாராயணபுரம், விஸ்வநாத சுவாமி சந்நிதியில் 32-வது வருடத்திய குருபூஜை, வேதாகமோக்த சைவசித்தாந்த சபையாரால் நடத்தப்பெற்றது, சிவாசாரியார்களும், சைவ மெய்யன்பர்களும் சொற்பொழிவாற்றினர். ஸ்ரீ நாயகர்மீது யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி சதாவதானம் நா. கதிரைவேற் பிள்ளையவர்கள் இயற்றிய செய்யுட்களுள் இரு செய்யுட்களை வாசித்து, திரு. நல். கண்ணப்ப முதலியார் பொருள் விரித்தனர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு ௬ } பலவான்குடி—ஆங்கீரச—பங்குனி { திங்கள் ௪.

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ண முன்னின்றே.

## மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாத் தொடங்குதல்.

"மூர்த்திதலந் தீர்த்தம் முறையாத் தொடங்கினர்க்கோர், வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே!" என்பது, சிவாநுபூதிப் பெருந்தகையாகிய நமது தாயுமானார் திருவாக்கு. இதனால், பத்திநெறி படர்ந்து, புராதனமான புண்ணிய தலங்களை நாடி, ஆங்குள்ள புனித நீராடி, இறைவனது அருவருவத் திருமேனியாகிய இலிங்காதி மூர்த்திகளை நியமமாக வழிபட் டிறைஞ்சும் இயல்புடையோர், உடல் மாசு மனமாசு கழியப்பெற்று, மெய்யுணர்வு தலைக்கூடற்குரிய ஒரு மொழியாகிய மறைமொழியை உபதேசித் தருளும் அருட்குரு தெரிசனம் வாய்க்கப் பெறுவர் என்பது அறியக் கிடக்கின்றது. அழுக்குடைய ஆடையில் வர்ணம் நன்றாய்ப் பிடியாதது போலவும், தூசுபடிந்த கண்ணாடியில் முகம் விளக்கமுறத் தோன்றாதது போலவும், மலமாசு படிந்த மலின அந்தக்கரணமுடைய ஆன்மாக்களகத்து அருட்குருவின் உபதேசமொழி உரம்பெறாமையா தென்பர். எனவே, ஆன்மாக்கள் அகந்தூய்மை புறந்தூய்மை அடைய, மூர்த்தி தலந் தீர்த்தம் முக்கிய சாதனங்களாக விளங்குகின்றன என்பது போதரும். இதனை வலியுறுத்தவே,

"கால்க ளாற்பய னென்—கறைக் கண்ட னுறை கோயிற்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக்—கால்களாற் பயனென்"
"ஆக்கை யாற்பயனென்—அரன் கோயில் வலம் வந்து
பூக்கை யாலட்டிப் போற்றியென் னாத இவ் ஆக்கையாற் பயனென்"

என்பனவாதிய அப்பர் அருண்மொழிகள் எழுந்தன.

இமசேது பரியந்த முள்ள நமது பாரத நாடு, தேவர் முனிவர் சித்தர் தபோதனர் சக்கரவர்த்திகள் முதலானோரால் காணப்பெற்ற— போற்றப்பெற்ற பழமையும் மகிமையும்வாய்ந்த ஸ்தலங்கள் தீர்த்தங்கள் மூர்த்திகள் நிரம்பியதொன்றா யிருத்தலின், புண்ணிய பூமியென உலகத்தாராற் புகழப்படுகின்றது. இத்தகு புண்ணியநாட்டில் நண்ணிய நாம், "தண்டா மரையி னுடன்பிறந்தே தண்டே னுகரா மண்டூகம்." போல, இதன்கண்ணுள்ள மூர்த்தியாதிய மும்மையையும் போற்றாது புறக்கணித்தால், செம்மை நல மறியாச் சிதடரோடொப்பாவே மன்றோ? அன்றியும், மக்கள் யாக்கையா லடையும் பேற்றையும் மறந்தவ ராவோம்.

மூர்த்தி தலம் தீர்த்தத்தால் ஒருபயனுமில்லை யென முழுநாத்திகம் பேசுதல் வெற்றுரையே யாகும். உதாரணமாக.—உலகத்திலே பலசக்கரவர்த்திகள் கூடிய இடம், மற்றைய பிரபலஸ்தர்களால் திறக்கப்பட்ட கட்டிடம், வெட்டப் பட்ட ஆறுகள் முதலானவைகள் எவ்வாறு பெருமை பெற்று விளங்குகின்றனவோ, அவ்வாறே அருட்டிருவாளர்கள் அளவில்லோர் திருவடிப் பரிசம் பெற்ற திருத்தலங்கள், திருமேனி தோயப் பெற்ற தீர்த்தங்கள், அருட்பாவனை யுற்ற மூர்த்திகள் ஆகியவை மிகப் பழைய காலந்தொட்டுப் போற்றிப் புகழப் பட்டு விளங்குகின்றன. அம் மூர்த்தி முதலியவற்றை முறையாத் தொடங்கினோர் அடையும் பெரும் பேறுகள் அநுபவ சித்தாந்தத்தில் அமைந்துள்ளன. அவற்றையெல்லாம் அவ்வத் தலபுராணங்கள், கல்வெட்டுகள் முதலியன விரித்து விளக்கும். மூர்த்தியாதிய மும்மை மகத்துவங்கள் சமணம் பௌத்தம் கிறித்தவம் மகமதியம் முதலிய எல்லாமதத்தர்களுக்கும் ஏற்புடையவேயாம். புண்ணிய ஸ்தலங்களைச்சூழ்த லாதியவற்றாற் புனிதத் தன்மை பொருந்துவதுடன், பல பெரியோர்களின் தெரிசனமும் வாய்க்கப் பெறும். அன்றியும், அவ்வத் தலங்களின் இயற்கை வளம், விவசாயம், கைத்தொழில், வியாபார விருத்திமுதலிய இம்மை நலங்களைத் தெரிந்துகோடற்கும் ஏற்றதாகும்.

ஆதலால், அன்பர்களே! ஆன்றோராசாரந் தப்பாது, மூர்த்தி தலம் தீர்த்தங்களை முறையாகத்தொடங்கி உண்மையுணர்வுற்று, உலகுக் கொருவனாகிய உத்தமன் றிருவருளை யடைதற் குரியவர்களாய் வாழ்வோமாக!

மூர்த்தியாதிய மும்மையில், மாசி மகாமக தீர்த்த மகத்துவத்தைப் பற்றிய பூரி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளின் ஸ்ரீ முகத்தைக் கண்டு அநுவதிக்கின்றோம்.

---

186925

௨

# மகாமக மான்மியம்.

---

(பூரி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் ஸ்ரீமுகம்.)

**ஸநாதனக்கோள்கை:—** அகண்ட (பிரிக்கக் கூடாத) அபரிச்சின்ன (காலதேச வர்த்தமானத்தால் கட்டுப்படாத) ஸர்வ வியாபி (எங்கும் எதிலும் நிறைந்துள்ள) ஸர்வக்ஞ (எல்லாம் அறிந்துள்ள) ஸர்வசக்தி (எல்லாச் சக்தியுமுடைய) ஸர்வாந்தர்யாமி (எல்லாரையும் ஆட்டிவைக்கிற) பகவான், சிருஷ்டிக்கப்பட்டுள்ள பிராணிகளின் க்ஷேமத்திற்காகத் தமது கருணை மிகுதியால் பல ரூபங்களில் தம்மை வெளிப்படுத்திக்காட்டி, நாம் எல்லோரும் அவரவர் நிலையிலிருந்து உயர்ந்து முடிவில் அவருடன் ஏகமாகக் கலந்துவிடும்படி செய்கின்றார் என்பது சநாதனதர்ம சித்தாந்தங்களில் ஒன்று. அவதாரங்கள், க்ஷேத்திரங்கள், தீர்த்தங்கள் முதலியவைகளுக்கு ஆதாரமாகவுள்ள சித்தாந்தம் இதுவே.

**அவதாரங்கள்:—** ஈசுவரன் அவதாரம் எடுக்கிறார் என்ற சநாதனக் கருத்து ஜனங்கள் நினைப்பதுபோல் நமது புராணங்களில் மாத்திரம் காணப்படுவதன்று. சீதை, ராமர், கிருஷ்ணர், நிருஸிம்மதாபினி, ராமதாபினி, கோபாலதாபினி முதலிய அவதாரங்கள் உபநிஷத்துக்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. பகவத்கீதை 4-வது அத்தியாயத்திலும், வேதங்களின் ஸம்ஹிதையிலும் அவதாரங்கள் கூறப்பட்டிருக்கின்றன. உதாரணமாக: புருஷசூக்தத்தில் "அஜாயமானோப குதாவி ஜாயதே" "பிறப்பில்லாதவன் பல பிறப்புகளை எடுத்துக் கொள்ளுகிறான்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அவதாரங்களைக் கிறிஸ்தவ மதம் ஒப்புக்கொள்வதுடன், அது அவதாரத்தையே ஆதாரமாக உடையதாகக் காணப்படுகிறது. ஆனால், ஒரே அவதாரம் (இயேசுகிறிஸ்து ஒருவரே) என்று அம்மதம் சொல்லுகிறது. அஃதெப்படியாயினும், பகவான் அவதாரம் செய்வார் என்ற சித்தாந்தம் அந்த மதத்திலும் கூறப்படுகிறது. நாம் யோசித்துப் பார்த்தால், தயாசிந்துவாகிய பகவான் ஒரு காலத்தில்தான், ஒரு தேசத்தில்தான், ஒரு ஜாதியில்தான் அவதாரம் செய்யவேண்டுமென்று தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டுவிட்டார் என்பது சரியல்லவென்று தோன்றும். எல்லாக் காலங்கள், எல்லா இடங்கள் ஆதியவைகளின் பொருட்டும் அவர் அவதாரமெடுப்பதே நியாயமாகத் தோன்றும். அதுதான் சநாதன சித்தாந்தம்.

**க்ஷேத்திரங்கள்:—** புண்ணிய க்ஷேத்திரங்கள் முதலியவைகளைப் பற்றி யோசிப்போமாயின், பகவான் ஸர்வ வியாபியாயினும்,வெவ்வேறிடங்களில் வெவ்வேறு அளவுள்ள சக்தியுடன் விளங்குகிறார் என்பதே சநாதன தர்மத்தின் அபிப்பிராயம். இந்த அபிப்பிராயத்தைப் பைபிளும் ஆதரிக்கிறது. மோஸஸை சினய்மலைக்கு வரும்படி பகவான் ஆக்ஞை செய்தார். சினய்மலையில் எந்த இடம் புண்ணியக்ஷேத்திரமென்று தெரியாமல் மோஸஸ் நடந்து போய்க்கொண்டிருக்கையில், பகவான் "மோஸஸ்! மோஸஸ்!!

உன்னுடைய செருப்பைக் கழற்றிவிடு; நீ நிற்கிற இடம் புனிதமானது." என்று சொன்னார்.

இவ்விதமே இந்தியாவிலாயிரக்கணக்கான புண்ணியக்ஷேத்திரங்கள், நதிகள், குளங்கள் முதலியன பகவத் அவதாரங்களின் சம்பந்தத்தாலும், மதசம்பந்தமான காரியங்களாலும், சரித்திர சம்பந்தமான காரியங்களாலும் சிரேயஸடைந்துள்ளன.

இந்தியாவிலுள்ள புண்ணிய நதிகளுள், பன்னிரண்டு அதி முக்கியமானவை. பன்னிரண்டு நதிகளில் ஒவ்வொன்றும் பன்னிரண்டு வருஷத்திற்கொருமுறை "புஷ்கரம்" என்ற புண்ணியகாலத்தைப் பெறுகிறது. எங்கெந்த நதி எப்பொழுது விசேஷமென்பது, குரு பன்னிரண்டு ராசிகளில் ஒன்றில் பன்னிரண்டு வருஷத்திற்கொருமுறை வருவதைப் பொறுத்திருக்கிறது.

மேஷத்தில் குரு சஞ்சாரம் செய்கையில் கங்கையிலும், விருஷபத்தில் ரேவாவிலும், மிதுனத்தில் ஸரஸ்வதியிலும், கடகத்தில் யமுனையிலும், சிம்மத்தில் கோதாவரியிலும், கன்னியில் கிருஷ்ணையிலும், துலாத்தில் காவேரியிலும், விருச்சிகத்தில் பீமாதியிலும், தனுசில் புஷ்கரவாஹினியிலும், மகரத்தில் துங்கபத்திராவிலும், கும்பத்தில் ஸிந்துவிலும், மீனத்தில் ப்ரணீதாவிலும், ஸ்நான தானாதி சகலமும் விசேஷம். பன்னிரண்டு வருஷங்களுக்கொருமுறை குரு ஒரு ராசிக்கு மறுபடி வருவதால், ஒவ்வொரு நதிக்கும் ஒரு வருஷத்தில் விசேஷ மேற்படுகிறது.

**மஹாமகம்:**— குரு துலாத்தில் சஞ்சரிக்கையில் காவிரிக்கு விசேஷமேற்படுவதல்லாமல், குரு சிம்மத்தில் இருக்கையிலும் அதற்கு விசேஷமேற்படுவதால், மேற்சொன்ன பன்னிரண்டு நதிகளிலும் அஃது இரட்டிப்புப் புண்ணிய தீர்த்தமாக விருக்கிறது. சிம்மராசியில் குரு சஞ்சரிக்கையில், சூரியன் கும்பராசியி லிருக்கையில், மக நட்சத்திரத்தில் சந்திரன் பிரவேசிக்கும் தினம் பரம புண்ணிய தினமாகும். அந்தத் தினத்திற்குத் தான் **மகாமகம்** என்று பெயர்.

**அமிர்தகலசம்:**— கடைசியாக நடந்த மகாப்பிரளயத்தில் ஜகத்அழிந்துவிட, பிரமாவின் பிரார்த்தனைப்படி ஒரு அமிர்த கலசம் புண்ணிய பூமி ஒன்றில் தங்குவரையில் ஜலத்தில் மிதக்கும்படி பரமசிவன் ஆஞ்ஞை செய்ததாகப் புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. கும்பகோணத்தில் ஸ்ரீ ஆதிகும்பேசுவரர்கோவில் இப்பொழுது இருக்கிற இடத்திலேயே அக்கலசம் தங்கிற்று.

கும்பம் உடைந்துபோகவே, ஒவ்வொரு துண்டுவிழுந்த இடத்திலும் ஒரு ஆலயம் நிர்மாணிக்கப்பட்டது. நாகேஸ்வரர்கோவில், அபிமுக்தேசுவரர்கோவில், கௌதமேசுரர்கோவில், பாணபுரீசுவரர்கோவில், விசுவநாதர்கோவில், காளஹஸ்தீசுவரர்கோவில், லட்சுமிநாராயணஸ்வாமிகோவில், வராகப்பெருமாள்கோவில், சக்கரபாணிகோவில், சாரங்கபாணிகோவில், ராமஸ்வாமிகோவில், வரதராஜர்கோவில் ஆகியவை, அப்படி நிர்மாணிக்கப்பட்டகோவில்களில் முக்கியமானவை. கும்பகோணத்தைச் சுற்றிலும் அதற்கு அப்பாலும் எத்தனையோ க்ஷேத்திரங்கள் இருக்கின்றன. திருபு



வனம், ஸ்வாமிமலை, மத்தியார்ஜுனம் முதலியவை வெகுபுராதனகாலக்ஷேத்திரங்கள். அமிர்த கலசம் கும்பகோணத்தில் தங்கிய விஷயம் மகாமக உற்சவத்தால் கொண்டாடப்பட்டு வருகிறது. அப்பொழுது, கங்கை, யமுனை, ஸரஸ்வதி, கோதாவரி, நர்மதா, காவேரி, சரயூ, கன்யா, பயோஷ்ணி ஆகிய ஒன்பது புண்ணிய நதிகள் அந்தர்வாகினியாய்க் கிணறுகள் வழியாக மகாமகக் குளத்தில் பிரவேசிக்கின்றன. இந்த விஷயம் பிரத்யட்சானுபவமானது. குளத்தில் அப்பொழுது ஜலமேறும். அப்படிப்பட்ட காலத்தில் புண்ய தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தவர் பலனைச் சொல்லிமுடியாது.

**மஹாமகத்தின் மஹாத்மியம்:**— மகாமக சம்பந்தமாக எத்தனையோ விஷயங்கள் நடந்திருக்கின்றன. அந்த விஷயங்கள், "ஸ்நாநத்தால் ஆத்மாவுக்கு லபிக்கும் சிரேயஸைக் காட்டுவதல்லாமல் நீடித்திருந்த பெருவியாதி, யானைக்கால், மலடு முதலிய சரீராவஸ்தைகள் ஆச்சரியமாக நிவர்த்தியாகிவிட்டன." என்று சொல்லுகின்றன. அந்த விருந்தாந்தங்களையெல்லாம் இப்பொழுது நாம் சொல்ல வரவில்லை. பூர்வீகமான சிலாசாஸனங்களும் இதர லிகிதங்களும் அந்த விருத்தாந்தங்கள் சத்தியமானவை என்று ஸ்தாபிக்கின்றன. மகாமகக் குளத்திற்குச் சமீபத்திலுள்ள நாகேசுவர ஸ்வாமி கோவிலாலும் கும்பகோணம் பிரசித்தியுடையது. சித்திரையீ 11, 12, 13-ந் தேதிகளில் சூரியன் உதயமாகையில் அதன் கிரணங்கள் ஸ்ரீ நாகேசுவர ஸ்வாமிமேல் விழுகின்றன. நவீனசாஸ்திரக்ஞர்கள் கவனிக்கக்கூடிய விஷயமிது. ஜோதிஷ சாஸ்திரஞானத்தையும் சிற்பசாஸ்திர ஞானத்தையும் கலந்து இக்கோவில் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீருங்கேரியில் கட்டப்பட்டுள்ள ஸ்ரீ வித்தியா சங்கர ஸ்வாமிகோவில் அதைக்காட்டிலும் விசேஷமுள்ளது.

மாகமக உத்ஸவம் கொண்டாடப்படும் க்ஷேத்திரமான்மியம் இப்படிப்பட்டதாகும். புண்ணியகாலத்தின் விசேஷத்தையும் சொல்லிவிட்டேன். எண்ணிறந்த ஜந்மாந்திரங்களில் சம்பாதித்துக்கொண்ட பாவங்களை, ஸ்நானம், தர்சனம் முதலியவைகளால் தொலைத்துப் புண்ணியத்தை அடைய லட்சக்கணக்கான பக்தர்கள் இத்தேசத்தின் பலபாகங்களிலிருந்தும் வந்து அங்கு கூடுவார்கள். இந்த க்ஷேத்திரங்களும் தீர்த்தங்களும் ஏற்பட்டு அளவுகடந்த காலங்களாகிவிட்டன. நாஸ்திகம் மலிந்துள்ள இக்காலத்திலும் அவை தங்களுடைய சக்தி குன்றாமல் நடைபெற்றுவருகின்றன. ஸநாதனதர்மம் ஸநாதனமானது (எப்பொழுதுமுள்ளது) என்றும், அதனுடைய சக்தி அபூர்வமானது என்றும், மற்ற சமாதானங்களைக் காட்டிலும் ஜகத் சிருஷ்டி காலத்தில் பகவானே அதை ஏற்படுத்தினார் என்றும், பிரளய காலம்வரையில் அது இருக்குமென்றும் சாஸ்திரங்கள் சொல்வதற்கு, எக்காலத்திலோ ஏற்படுத்தப்பட்டுள்ள புஷ்கரங்கள் இன்றும் நடைபெற்று வருவதே ருஜுவாக இருக்கின்றது.

(சுதேசமித்திரன்.)

---

திருச்சிற்றம்பலம்.

எவியிடர்க் கடலிடைப்பட் டிளைக்கின் றேனை
இப்பிறவி யறுக்கேறா வாங்கி ஆங்கே

கூவியம ருலகனைத்து முருவிப் போகக்
குறியிலறு குணத்தாண்டு கொண்டார் போலும்
தாவிமுதற் காவிரிநல் யமுனை கங்கை
சரஸ்வதிபொற் றாமரைபுட் கரணி தெண்ணீர்க்
கோவியொடு குமரிவரு தீர்த்தஞ் சூழ்ந்த
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெம் கூத்த னாரே.

திருச்சிற்றம்பலம். திருநாவுக்கரசர்.

---

# ஆசார்ய மஹிமை.

திருவல்லிக்கேணி, திரு. நல். கண்ணப்ப முதலியார் அவர்கள்.

சேக்கிழார் திருவாக்கிற் பெறப்படாது இதர புராணங்களிற் பெறப்படுமவற்றுட் சில காட்டுவாம்:—

1. சுந்தரமூர்த்திசுவாமிகட்குப் பழமலைநாதர் கொடுத்தருளியபன்னீராயிரம் பொன்னை மணிமுத்த நதியிலிட்டுஅதனைத் திருவாரூர்க் கமலாலயத் தீர்த்தத்தி லெடுத்து, அங்கு தீர்த்தக்கரையி லெழுந்தருளியிருந்த விநாயகரிடங் காட்டித் தான் சுவாமியிடம் வாங்கிவைத்திருந்த ஆணிப்பொன்னுக்குச் சரியாக மாற்றுரை பார்க்கச்செய்து ஒப்புக்கொண்டாரென்று அத் தலபுராணங் கூறுகின்றது.

2. சோமாசிமாற நாயனாரிடம் செலச் சிவபெருமானைச் சுந்தரமூர்த்திசுவாமிகள் வேண்டிக்கொண்டவாறு, அந்நாயனா ரியற்றிய யாகத்தில் சுவாமி சண்டாள ரூபந் தாங்கி மதுக்குடமும், மாமிஸ கண்டமும் ஏந்திச்சென்று காட்சிகொடுத்தருளினாரென்று சில புராணங்கள் கூறுகின்றன. சுவாமி மதுக்குட மேந்திச் சென்றபோது அது பொங்கிய இடம் பொங்குசூராநல்லூர் என்று பிரசித்தியடைந்திருக்கின்றது. இம் மஹிமாதிய மஹோத்ஸவங்கள் திருஅம்பர்மாகாளம், திருநாகைக்காரோணம் முதலிய க்ஷேத்திரங்களிலின்றும் நடைபெறுகின்றன.

3. முத்தி க்ஷேத்திரங்கள் எழுனுள் ஒன்றும், தொண்டைநாட்டு ராஜதானியு மாகிய காஞ்சிப்பதியிலே சுந்தரமூர்த்தி சுவாமிகள் எழுந்தருளும்போது, சுவாமி ஒரு வயலிற் கரந்திருப்பக் கண்டு, தாமிழந்த ஊனக்கண்களிரண்டில் ஒரு கண் பெற்றனர். சுவாமி ஒளித்திருந்த இடம் கள்ளக்கம்பன்பட்டடை என்று பிரசித்தி பெற்றிருக்கின்றது. இம் மகோத்ஸவம் ஷை தலத்தில் நடந்து வருகின்றது.

4. திருப்பேரூரில் சுவாமியும் அம்மையும் ஒரு வயலிற் சென்று களைபறித் திருந்தார்கள். அதைச் சுந்தரனுக்குச் சொல்லவேண்டாமென்று நந்திக்குக் கட்டளை. சுந்தரமூர்த்திகள் கோயிலில் சுவாமியையும் அம்மையையுங் காணாமையால், அம்மை யப்பர்கள் எங்கேயென்று கேட்க, சுந்தரமூர்த்திகட்குப் பொய் சொல்லமாட்டாமலும் நந்திதேவர் சுவாமியாணை கடக்கமாட்டாமலும், ஒன்றும் சொல்லாது அம்மை யப்பர்கள் ஒளித்திருக்கும் திசையாக முகத்தைத் திருப்பிக்கொண்டனர். அஃதுணர்ந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள், அவ் வயலிற் சென்று, அங்குக் களைபறித்துக் கடையர் கடைச்சியராக சுவாமியும் அம்மையு மிருப்ப கண்டு திருப்பதிக மோதித் துதித்தனர். சிவபெருமான் மகிழ்ந்துதாண்டவஞ் செய்தருளினர். ஷை தலத்தில் இன்றும் இம்மஹோத்ஸவம் நடந்துவருகின்றது.



5. சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவீங்கோய்மலைக்குச் சென்றனர். சிவபெருமான் திருக்கோயிலி லில்லை. சுற்றிலுந் தேடி அதற்கடுத்த ஒரு புளியமரத்தின்மேற் கண்டு பொன் வேண்டுமென்றார் வன்றொண்டர். பொற் புளியங்காயை யறுத்து முன்னே போட்டார் சிவபெருமான். அதைக்கொண்டு மகிழ்ந்து திருப்பாச்சிலாச்சிராமஞ் சென்று தொழுதார் சுந்தரமூர்த்திகள். அங்கு வணிகரா யெதிர் தோன்றினார் சிவபெருமான். அவரிடம் பொற் புளியங்காயைக் கொடுத்து மாற்றுரை பார்க்க வென்றார் நம்பியாரூரர். பார்த்து மாற்றுயர்ந்த பொன்னிது வென்றார் சிவபரஞ்சுடர். பரஞ்சுடர் "மாற்றறிவாணர்" என்று பிரசித்தி யடைந்திருக்கின்றனர் அத் தலத்தில். சுந்தரமூர்த்திகள் மீண்டும் ஈங்கோய் மலைக்கு வந்து முற்படியே புளியமரத்தின் மேலே கண்டார் சுவாமியை. சுவாமியைப் பார்த்துப் "பொன்னம்பலவாணரே! புளியங்காய் பறித்தீரோ?" என்றார். சுவாமி, "இல்லைகாண் புலவரே நெருப்புக்காய் பறிக்கிறோம்." என்று மரத்திலிருந்து சில காய்களை யுகுத்தார். அக் காய்களைச் சுந்தரமூர்த்திக ளெடுத்து நறுக்கிப் பார்த்தனர். அவை புகைந்தும் கரிந்தும் போயின. இவ்வாறு சுவாமி திருவிளையாடல் புரிந்த இந்தத்தலத்தில், புளியமரங்கள் காய்த்துப் பழுக்கிற சமயத்தில் கரிந்து அவலமாவதை இன்றுங் காணலாம்.

6. விறன்மிண்ட நாயனார் சுந்தரமூர்த்தி சுவாமிகளிடம் வைத்த வெறுப்புக் காரணமாக அவரது ஞாபகத்தை யுண்டுபண்ணுந் திருவாரூர் என்பார் காலைவெட்டு நியமம் மேற்கொண்டு அடியார்களைப் பூசித்துவந்தார். தியாகராஜப்பெருமா னோர்நாள் அடியார்வேடங் கொண்டு சென்று தமது பதி செல்வத் திருவாரூர் என்று கூறுதலும், அவர் காலை வெட்டவரவே, அடியாராய் வந்த சுவாமி யோடித் திருவாரூ ரெல்லையை யடைந்தனர். துரத்திச்சென்ற நாயனாரும் அவ் வெல்லையிற் றமது ஒரு பாதத்தை வைத்துவிட்டதால், தமது ஒற்றைக்காலை வெட்டப் புகுதலுந் தியாகராஜப் பெருமான் திருவுருக்காட்டி அவரைத் தடுத்துத் திருவருள் புரிந்தனர் என்று புராணங்கள் கூறுகின்றன.

7. திட்டை என்னும் பதியில் அப்பர் சுவாமிகளது திருவடிக் கபராத மிழைத்த பாஞ்சராத்திரிகள்பொருட்டு அவர்களது பெருமாள்கோயிலை வெள்ளங்கொண்டுபோகும்படித் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரத் திருப்பதிக மோதி யருளினரென்று அவ்வூர்த் தலபுராணங் கழறுகின்றது.

8. மதுரைக் கணித்தாய் ஒரு சிவக்ஷேத்திரத்திற்கு திருஞானசம்பந்த சுவாமிகள் சென்று அங்கு எல்லாம் இலிங்கவடிவெனக் கண்டு, திருவடி வைத்து உள்ளேபோக விலையாராக, அந்தந்த சுவாமி அம்மையாரைப் பார்த்து, "உன் மகன் வெளியிலிருப்பது அறிந்திலையோ!" என்று கூறினர். அம்மை யோடிவந்து தமது பிள்ளையாரை யெடுத்துக் கையி லிடுக்கி உள்ளே சென்று சுவாமி பக்க லிருந்தனர். அப்போது அவரது திருக்கரத்தி லிருந்தபடியே பிள்ளையார் திருப்பதிக மோதி யருளினர். அவ் வம்மையாருக்குப் "பிள்ளையிடுக்கியம்மை" என்பது திருநாமம். இவ் வற்புத சரித்திரத்தைச் சில புராணங்கள் கூறுகின்றன.

9. திருப்பூந்துருத்தியில் திருஞானசம்பந்த சுவாமிகள், சுவாமி தெரிசனஞ் செய்யப் போயினர். அப்போது சுவாமி பிள்ளையாரை முத்துச்சிவிகையி லிருந்த கோலமாகவே பார்த்து மகிழவேண்டி அவர் கோபுரவாயிலில் சிவிகையினின்று மிறங்குவதன் முன்னர் நந்தியை விலகும்படி கட்டளையிட்டனர். அவ்வாறே விலகினர் நந்தியெம்பெருமான். அப்படியே யிப்போது மந்தத் தலத்தில் நந்திதேவர் வேறு அங்கணத்திலிருக்கின்றனர் என்று தலபுராணஞ் சாற்றுகின்றது.

10. திருவோத்தூரில் திருஞானசம்பந்த சுவாமிகள் சமணரை வாதில் வென்றருளினரென்றும், அந்தத் தலத்தில் பராசரமுனிவரது சாபத்தா லிரு வரக்கர் வேலமரமாய்க் கிடந்ததை அப் பிள்ளையார் நிவாரணஞ் செய்தருளினரென்றும் சில புராணங்கள் கூறுகின்றன.

11. திருநெல்வேலித் தலத்தில் திருஞானசம்பந்த சுவாமிகள் அகஸ்திய பகவானுக்கு அருள்புரிந்தும், சமணர்களை வாதில் வென்று சைவஸ்தாபனஞ் செய்தும், அந்த க்ஷேத்திரத்தில் தனியாலயங் கொண்டு எழுந்தருளியிருக்கிறாரென்று சில புராணங்கள் கூறுகின்றன. இன்னன பல்ல. ஆனபடியால், தலபுராணங்களெல்லாம் தப்பு என்று தடுமாறித் தருக்கித் திரியுந் தமிழர்களே! தடுமாறாதீர்கள். நன்மை கடைப்பிடியுங்கள்.

---

# திருஞானசம்பந்தரும் உரோமச முனிவரும்.

---

திருஞானசம்பந்தர் தம்மை உரோமச முனிவரது அவதாரமென்று தாம் அருளிச்செய்த தேவாரத்திற் பெறப்படுகிறதென்று சென்னையிலுள்ளார் சிலர் தருக்கினர். அதனுண்மையை யாராய்வாம்.

**(திருஞானசம்பந்தர் தேவாரம் வழிமொழித் திருவிராகம். பண் - சாதாரி)**

திருச்சிற்றம்பலம்.

"ஒழுகலரி தழிகலியி லுழியுலகு பழிபெருகு வழியை நினையா
முழு துடலி லெழுமயிர்க டழுவுமுனி குழுவினொடு கெழுவு சிவனைத்
தொழு தலகி லிழுகுமல மழியும்வகை கழுவுமுரை கழுமல நகர்ப்
பழு திலிறை யெழு துமொழி தமிழ்விரகன் வழிமொழிகள் மொழிதகையவே."

திருச்சிற்றம்பலம்.

சென்னை மஹாமஹோபாத்தியாயர் தாக்ஷிணாத்தியகலாநிதி டாக்டர், உ. வே. சாமிநாதையரவர்கள் எழுதியவுரை:—

ஒழுகல் அரிது அழி கலியில் - யாவரும் நன்னெறியில் நடத்தலரிதாகிய அழிதற்குக் காரணமாகிய இக்கலியுகத்தின்கண்ணே, உலகு உழி — இவ்வுலகத்தினிடத்து, பழி பெருகு வழியை நினையா - பழிக்கப்படும் தீநெறிகள் பெருகும் விதத்தை நினைந்து, முழுது உடலில் எழும் மயிர்கள் தழுவும் முனி - உடல் முழுதும் வளர்ந்தெழுந்த உரோமங்கள் சூழப்பெற்ற உரோமசமுனிவர், கெழுவு குழுவினொடு - தம்மோடு பொருந்திய முனிகணங்களோடு கூடி, சிவனைத் தொழுது - சிவபெருமானை வழிபட்டு, உலகில் இழுகும் மலம் அழியும் வகை கழுவும் - உலகத்தில் ஆன்மாக்கள் தத்தம் நிலைகுலைதற்குக் காரணமான அஞ்ஞானமான சேற்றைக் கெடும்வண்ணம் கழுவியதற்கிடமான, உரை - ஆன்றோர்கள் துதிக்கின்ற, கழுமல நகர்ப் பழுது இல் இறை - கழுமலமென்னுந் திருநாமத்தை யுடைய திருப்பதியின்கணெழுந்தருளிய குற்றமில்லாத இறைவன்மீது, மொழி எழுது — சொற்களைத் தொடுத்து எழுதுவித்த, தமிழ் விரகன் வழிமொழிகள் - திருஞானசம்பந்தப் பிள்ளையார் அருளிச்செய்த பின்னெதுகைத் தொடையையுடைய திருவிராகங்களிலுள்ள, மொழி - சொற்களானவை, தகைய - பாராயணஞ்செய்பவர்களுக்கு எண்ணியவற்றை எண்ணியவாறே அருளிச்செய்து பெருமைபெறுக.

விசேடவுரை: அரிதாகிய கலியென வியையும். கலியில் - கலியுகத்திற் பழிபெருகுதல் போல வென்றுமாம். நினையா - செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். நினையாத்தொழுது கழுவும் கழுமல நகரெனக் கூட்டுக. கழுவும் என்னும் பெயரெச்சம் கழுமல நகரென்னும்இடப்பெயர் கொண்டுமுடிந்தது. முழு துடலி லெழுமயிர்க டழுவுமுனி - உரோமசமுனி. பலகாலுந் தவம் செய்யும் முனிவர்களுடல் முழுதும் உரோமங்கள் வளர்ந்திருக்குமென்பதைப் புராணங்களிலும் காணலாம். உரோ

மச முனிவர் இச் சீகாழியை யடைந்து, தவஞ்செய்து, சிவபெருமான் ஞானோபதேசம் செய்யப்பெற்று மலங்கழுவி வீடுபெற்றமையால், இத்தலம் திருக்கழுமலம் என்னுந் திருநாமம்பெற்றது. இதனைச் சீகாழித் தலபுராணத்திலுள்ள கழுமலமான வத்தியாயத்தாலுணர்க. உரைகழுமலம் - வினைத்தொகை. இத்திருப்பதியைக் கழுமல நகரென்றதற் கேற்ப இறையைப் பழுதிலிறையென்றார்.

'கல்லானிழல்' என்னுஞ் செய்யுளில், 'மலைவுஇல்லான்' என்றதற்கு மலைவை இல்லையாகச்செய்பவனென்று சிவஞானமுனிவ ரருளிச் செய்தது போலப், பழுது இல் இறை யென்றதற்குப் பழுதைஇல்லையாகச் செய்யுமிறை யெனப் பொருள்கூறினும் பொருந்தும். சிவபெருமானையும் சமயாசாரியர்களையும் அபேதமாகக் கூறுதல் ஆன்றோர் வழக்காதலால், இறையெழுதுமொழி தமிழ்விரகன் வழிமொழிகள் என்பதற்கு, இறைவனருளிச் செய்த வடமொழிவேதமே தமிழ்விரக னருளிச்செய்த வழிமொழித் திருவிராகமாகிய தென்மொழிவேதமெனப் பொருள்கூறினும் பொருந்தும். தமிழ்விரகன் வழிமொழிகள் எழுதுமொழியென இயைப்பினுமமையும் இயைக்குங்கால் எழுதுமொழியென்றது எழுதாமொழியாகிய வடமொழி வேதத்திற்கும் இதற்குமுள்ள வேறுபாடுகூறியபடி. இவ்விரண்டும் எழுதப்படுவது எழுதப்படாததென்னும் வேறுபாட்டையன்றி, மற்றை ஒருவகையானும் வேறுபாடில்லாதன வென்பதாம். வழிமொழிகள் மொழிதகையவே யென்றதற்கு வழிமொழித் திருவிராகங்கள் மொழியும் பெருமையினையுடையன வாகுகவெனக் கூறுதலுமொன்று. இத்திருப்பதியின் பன்னிரண்டு திருநாமங்களுள், கழுமலமென்பதன் காரணத்தை இப்பன்னிரண்டாஞ் செய்யுள் புலப்படுத்தியதுபோல, மற்றைப் பதினொருதிருநாமங்களின் காரணங்களை இதற்கு முன்புள்ள பதினொருசெய்யுட்களும் நன்கு புலப்படுத்தி யிருத்தல்காண்க. இதுபற்றியே இத் திருப்பதிகம் பன்னிரண்டு செய்யுட்களை யுடையதாயிற்று.

**வழிமொழித் திருவிராகம்:** வழி - பின்; இராகம் - முடுகியல்; வழிமொழியென்றது பின்னெதுகைத் தொடையை யுடைய மொழிகளை. வழிமொழித் திருவிராகம் - அடிகடோறும் பின்னெதுகைத் தொடையையுடைய திருவிராகம். இப் பின்னெதுகைத் தொடையை அனுப்பிராஸமென்பர் வடநூலார். இனி, இத் திருப்பதிகத்துக்குரிய பன்னிரண்டும் வந்தவழியை மொழிதலையுடைய திருவிராகமெனப் பொருள் கூறினும் பொருந்தும்.

* * * *

சிதம்பரம் ஈசானியமடத்து உயர்திரு இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் எழுதிய உரை:—

முழுதுஉடலில் எழும் மயிர்கள் தழுவும்முனி - உடல் முழுமையும் கிளைத்த உரோமந்தழுவலால் உரோமசரெனப் பெயர்பெற்ற முனிவரானவர், ஒழுகலரிது அழிகலியின் உழிஉலகு பழிபெருகு வழியை நினையா— யாவரும் தம்முடைய நெறியின்கண்ணே ஒழுகுதலரிதாகும்படி அழிக்கின்ற கலியுகத்திலே உலகில் பழியே பெருகுகின்ற நிலைமையைச் சிந்தித்து,



குழுவினொடு கெழுவுசிவனைத் தொழுது - கணங்களோடு கலந்து விளங்கும் சிவபெருமானை வழிபட்டு, உலகில் இழுகும் மலம் அழியும் வகைகழுவும் உரை கழுமலம்நகர் பழுதில் இறை - இவ்வுலகின்கண் தவறுதற்கேதுவாகிய மும்மலங்களும் அழியும்படி கழுவும் உயர்ச்சியால் கழுமலமெனப் பெயர்பெற்ற இத்தலத்திலே வீற்றிருக்கும் அழிவிலாக்கடவுளை, தமிழ்விரகன் எழுதுமொழி வழிமொழிகள் மொழிதகைய - தமிழ்விரக ரெனப்படும் நாம் துதித்த எழுதப்படும் வேதமாயுள்ள இவ் வழிமொழித் திருப்பதிகப்பாடல்கள் எவரும் துதிக்கும் மேன்மையை யுடையன.

**விசேடவுரை:** முனிநினையா சிவனைத்தொழுது மலங்கழுவும் கழுமலம் என இயையும். உரோமசமுனிவர் சிவஞானோதயத்தின் பொருட்டுச் சிவபெருமானை வழிபட்டு மலத்தைக் கழுவலால், கழுமல மெனப் பெயர் பெற்றமை சீகாழித் தலபுராணக் கழுமலவத்தியாயத்துட் காண்க. அரிது என்பது அரிதாக வென்னும் எச்சப்பொருளையும், அழியென்னும் வினைத்தொகை பிறவினையையுந் தந்தன. பழியே என்னும் பிரிநிலை யேகாரம் விகாரத்தாற்றொக்கது. உரை - உயர்ச்சி; உரையாலென மூன்றாம் வேற்றுமை யுருபுவிரிக்க. எழுதாக்கிளவியாகிய வேதம்போலாது இது எழுதப்படும் வேதமாகலின் எழுதுமொழி யெனப்பட்டது. வழி - முறைமை, அல்லதுகாரணம்; மொழி - மொழியப்படுவது; எனவே, அத் தலத்திற்கு வந்த பன்னிருபெயர்க்காரணமும் முறையே மொழியப்பட்ட பதிகமெனப்பொருள்படும். இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலினும் அவ்வப் பெயர்க்காரணம் சுருக்கிவிளக்கி யிருப்பதுபோல், இத் திருக்கடைக்காப்பினும் உரோமச முனிவர் மலங்கழுவலால் கழுமலமெனப் பெயர்பெற்றதென்று விளக்கியதன்றி, திருஞானசம்பந்தப் பிள்ளையார் தம்மை உரோமசரெனப் புலப்படுத்தியது சிறிதும் இன்றென்க.

* * * *

இவ்வாறே யாழ்ப்பாணத்து வித்துவான் சி. தம்பையாப்பிள்ளையவர்களும், சென்னை சோடசாவதானம் சுப்பராயச் செட்டியாரவர்கள் முதலிய பண்டிதர்களும் எழுதியுள்ள மெய்யுரைகளால்,உரோமசமுனிவர் திருஞானசம்பந்தராக வந்ததில்லை யென்பது யாவரும் ஸ்பஷ்டமா யறியத்தக்கதாயிற்று. உரோமசமுனிவர் சிவதலங்கடோறுஞ் சென்று அரும்பெருந் தவமுயன்றும், தீர்த்தங்களின் மூழ்கியுஞ் சிவஞான முதிக்கப்பெறாமல் சீகாழியையடைந்து சிவபெருமானை விதிப்படி வழிபட அக்கடவுள் கருணைகூர்ந்து உமாதேவியாரோ டெழுந்தருளிப் பதிபசுபாசங்களை ஐயந்திரிபறவிளக்கி யநுக்கிரகித்தமையால், அவர்உண்மைஞானம் பெற்றாரெனவும், அந்த ஞானங்காரணமாக அவரது மலங் கழுவப் பெற்றமையால் அப்பதிக்குக் கழுமலம் என்னும் பேர் சிறந்ததெனவும் தெளியக்கடவர்.

நல். கண்ணப்ப முதலியார்,
வேதாகமோக்த சைவசித்தாந்த சபைத் தலைவர்,
திருவல்லிக்கேணி, சென்னை.

———

உ

# சிவபெருமான் சர்வவியாபகர்.

(அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்களவர்கள் எழுதியது.)

சிவபெருமான் எள்ளும் எண்ணெயும் போலவும், மணியும் நாதமும் போலவும், பூவும் மணமும் போலவும், இரத்தினமும் ஒளியும்போலவும் உலகமெங்கும் உள்ளும்புறம்புமாய் வியாபித்து நிற்பர். இதனை,

எள்ளுறு மெண்ணெ யென்ன வெறிமணி யரவ மென்னக்
கள்ளுறு போது கான்ற கடியெனச் சலாகை தன்னிற்
றள்ளுற வரிய சோதி தானென வுலக மெங்கு
முள்ளொடு புறம்பு மாகி யொருமையாற் பரவு மன்றே.

என்னும் கந்தபுராணம் உபதேசப் படலம் கஉ-ம் கவியாலும், "நேயமெண்ணுற்றென நிறைந்த, கண்ணுதனுயகன்." என்னும் ஷை தக்கன் மகப்பெறு படலம் கரு-ம் கவியாலும், 'ஆவியு ளாவி யானேன்" ஷை ததீசிப்படலம் உக-ம் கவியாலும், 'இந்தனத்தி னெரிபாலி னெய்பழத்தி னிரத-மெள்ளின்க ணெண்ணெயும்போ லெங்குமுள னிறைவன்' என்னும் சித்தியார் (கூ-ரு-கஉ-ம்) கவியாலும் அறிக.

பரமான்மசிவபெருமான், "எள்ளில் எண்ணெய்போன்றும், தயிரில் நெய்போன்றும், (வறந்த) நதியில் ஜலம்போன்றும், அரணியில் அக்கினிபோன்றும் மறைந்துள்ளார். இங்ஙனம் ஆன்மாவிலே, ஆன்மா (சிவபிரான்) அறியப்படுகின்றார்; இவன் இவரைச் சத்தியத்தோடும் ஞானத்தோடும் இயைந்துபார்க்கிறான்." எனவும், 'பாலில் நெய்போல யாண்டும் வியாபகராயுள்ள ஆன்மாவை(பிரமத்தை)த் தனது ஞானத்துக்கும் மூலமாயுள்ளது என்றும், அஃது உபநிடதத்திற் கூறப்பட்ட பரப்பிரமமென்றும் பார்ப்பானாக' எனவும் முறையே சுவேதாசுவதர உபநிடதம், (க—கரு; க—கசு) கூறியதூஉம் இப்பொருள் பற்றியேயாம் என்க. திருநாவுக்கரசுசுவாமிகள்,

திருச்சிற்றம்பலம்
விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோனட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே.
திருச்சிற்றம்பலம்

எனத் திருவாய்மலர்ந்தருளியதூஉம் காண்க. இறைவர் இவ்வாறு எவ்விடத்துமுளராதலால், அகத்தாதல் புறத்தாதல் எவ்விடத்து வழிபடினும் அனுக்கிரகிப்பர் என்பது பெறப்படும்.

சிவபெருமான் பிரமவிட்டுணு முதலிய அளவில்லாத உயிர்களை முன்னாளிலே தந்த பரமபிதாவாய், அவைகளையெல்லாம் காத்தழித்து உலகெலாமாகி நிற்றலால் ஒன்றாயும் (அபேதமாயும்,) உலகுக்குமேலாய் நிற்றலால் வேறாயும் (பேதமாயும்), உயிர்க்குயிராய் நிற்றலால் உடனாயும் (பேதாபேதமாயும்) நிற்பர்.



"எட்டுத்திசை தானாய் வேறா யுடனா னிடம் வீழிம் மிழலையே" என்னும் திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாக்குக்கிணங்க, கச்சியப்ப சிவாசாரியர் ததீசிப்படலம் கஅ-ம் செய்யுளில் 'உலகெலா மாகி யொன்றா யுயிர்க்குயி ராகி மேலாய்' என்று திருவாய்மலர்ந்தனர். 'உலகெலா மாகி வேறா யுடனுமாய்.' சித்தியார் (உ—க)

சிவப்பொருளை அறியும் அநுபவத்தில் அறிவுநிகழ்வதற்கு ஆன்மாவினுடைய அறிவுடனே கலந்து ஒன்றாயும், அறியப்படுவதற்குப் பொருட்டன்மைபற்றி ஆன்மாவின்வேறாயும், அறிதற்றொழில் நிகழுவதற்கு ஆன்மாவினுடைய அறிவைச்செலுத்தி அவ்வறிவோடு உடனாயும், இவ்வாறு சிவபெருமான் அத்துவிதமாய் நிற்பர். சித்தியார்: சு—ரு—கூ.

சிவபெருமான் உயிரின் வேறு அல்லாமையால் ஒன்றாயும், அறிவித்தற்கு உயிரின் அறிவினுள்ளாக நிற்பதால் வேறாயும், உயிரின் அறிவினுள்ளாக நின்று செலுத்துதலால் உடனாயும் நிற்பர். இவ்வாறுநிற்கும் சிவனை, அறிவானும் அறிபொருளும் அறிவும் எனப்பகுத்து அறிந்து கொள்ளுதல் கூடாது. யான்அறிவேன் என்றதனால் மலம் நீங்காது. ஆதலால், சிவபெருமான் உயிரறிவினால் அறியப்படாதவன் என்பது பெறப்படும்.

சிவபெருமான் உயிரோடு ஒன்றாய் நிற்றலும், வேறாய்நிற்றலும், உடனாய் நிற்றலும் ஆகிய இம்மூன்று தன்மைகளும் உயிரும் உள்ளனவாம் என்பதை, எங்ஙனம் அறிந்து கொள்ளுதல் கூடும்? என்றுவினாவின், உயிரும் சிவமும் ஒன்றென்று சொல்லில் அவ்வாறு அறிவதொரு பொருள்உண்டுஆதலால், அச்சிவம் அறிவானுக்கு வேறாய்நிற்றல் பெறப்படும். அதனால், வேறென்று சொல்லின், அவ்வாறுவேறாக அறிவதற்கு அறிவுக்குள் அறிவு பிரிந்து தோன்றாமையினாலே வேறு என்றுசொல்லும் அறிவுக்கு எட்டாது உடனாய்நிற்றல்பெறப்படும். அவ்வாறு அறியும்பொழுது அவ்வறிவினுள்ளாக எக்காலத்திலும் நீரினிடத்து நிழல்போல உயிரேசிவம் என்னும்படி கலந்துநிற்கும். ஆதலால், ஒன்றாதல் பெறப்படும். ஆதலால், உயிரோடு அத்துவிதமாய் நிற்கும் சிவபெருமானைக் காணவேண்டின், சூரியனை அதன் கிரணத்தால் காணுதல்போல, அச்சிவனுடைய திருவருளினாற் காணுதலே தக்கதாகும்.

"அவனருள் பெறாது முத்தி யடைந்தன ரில்லை யல்லா
லவனரு ளின்றி வாழு மமரரும் யாரு மில்லை
யவனரு ளெய்தி னெய்தா வரும்பொரு ளில்லை யானை
யவனல திறைவ னில்லை யவனைநீ யடைதி யென்றான்."
(கந்தபுராணம்-உபதேசப்படலம்)

திருச்சிற்றம்பலம்

"மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி மயானத்தான் வார்சடையானென்னி னல்லா, னொப்புடைய னல்ல னொருவ னல்ல னோரூர னல்லனோ ருவம னில்லி, அப்படியு மந்நிறமு மவ்வண் ணமமு மவனருளே கண்ணாகக் காணி னல்லா, லிப்படிய னிந்நிறத்த னிவ்வண் ணத்த னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொ ணாதே. (திருநாவுக்கரசர்)

திருச்சிற்றம்பலம்

உ

# வெங்காரம் வெய்தெனினும் நோய்தீர்க்கும்.

திருவாளர் க. ராஜமாணிக்கப் பிள்ளை அவர்கள்.

அன்னம் பருகுவது இன்னமுதம். காக்கை உகப்பது கழிமுடைப் பிணம். இன்னமுதம் உயர்ந்தது. முடைப்பிணம் இழிந்தது. இரண்டும் உலகப்பொருள்; சிவசிருஷ்டி. அழகிய வுலகில் அறிவுடைப் பரமன் அழுகத்தை ஆக்கல் அடுக்கும்: பிரேதம் இருப்பது அதன் அழகுக்கும் அவன் அறிவுக்கும் பழுதன்றோ வெனின், அன்று. வினை வயத்தால் ஒருயிர் காக்கைப் பிறப்பெடுத்தது. கண்ணுதல் அதன்மேலுங் கருணை வைத்தார். பிணந் தோன்றற்கு இன்றியமையாமையும் ஏற்பட்டது. உயிர்கள் எண்ணிறந்த; பலவகைய; வினைவயத்த. உலகம் அவற்றின் புசிப்பிற்கே ஆனது. ஆகலின், அதுவும் பலவிதமாயமைந்தது. புசிப்பவன் தகுதிக்கு ஏற்பத்தானே போசனமுமிருக்கும்? ஆகவே, அன்னமனையார் பிணம் போல்வனவற்றைத் தமக்கல்லவென வொதுக்குவதே முறை. அதனை விடுத்து இழிபொருளிருப்பது கொண்டு உலகத்தின் அழகையும் இறைவனின் அறிவையுமே ஐயுறுவது அறிவன்று. பலபொருள் வடிவாகிய இவ்வுலகம் அர்த்தப் பிரபஞ்சமெனப்படும்.

மக்கள் ஆயும் வித்தைகள் அளவற்றன. அவற்றுள் பதியைப் பற்றியன பல. பசுவைப் பற்றியன பல. பாசத்தைப் பற்றியன பல. எவ்வகை வித்தைகளும் இம்மூவகையுள் அடங்கும். இம்மூன்றிலும் ஒவ்வொன்றையும் பற்றித் தனித்தனி பேசும்நூல்கள் பல்கோடி. ஆனால், அத்தனை வித்தைகளும் வித்தில் ஆல்போல் அடங்கியிருப்பது எங்கே? அதுதான் வேதம். அது, இருக்கு எசுர் சாமம் அதர்வணம் என நான்காய்விளங்கும். அவ்வேத மொன்றே முதனூல்; ஏனையவெல்லாம் வழி சார்புகள். வேதமும் உலகம் போலச் சிவசிருஷ்டியே. உயர்ந்த வித்தையும் இழிந்த வித்தையும் அவ்வேதத்திலும் உண்டு. அது கொண்டுதானே அதன் தூய்மையும் ஆக்கியோன் பெருமையுங் கெடா. மனிதரில் மலின அறிஞரும் உளர்; தெளிந்த அறிஞரும் உளர். அவ்வவ் வறிஞர் கொள்ளத்தக்க வித்தைகள் அதிலிருப்பது எப்படிக் குற்றமாகும்? தெளிந்த அறிஞர் இழிந்தவித்தைகளைத் தமக்கல்லவென வொதுக்கவே கடன்பட்டுளார். ஆகவே, உலகம் போல வேதமும் பூரணமுடையது என்பது சத்தியமாதல் காண்க. பலஒலி வடிவாகிய அவ்வேதம் சப்தப் பிரபஞ்சமெனப்படும்.



சப்தம் அர்த்தம் என்னும் இரண்டு பிரபஞ்சங்களும் ஸ்ரீ சிவபிரானது முழுமுதன்மையைச் சுட்டிக்கொண்டே யிருக்கின்றன. "வேத நான்கினு மெய்ப்பொருளாவது, நாத னாம நமச்சி வாயவே" "ஞாலமே கரியாக நானுனை நச்சி' என்பனகாண்க. சிவனுக்குமேற் கர்த்தாவும், சங்காரத்துக்குமேற் கிருத்தியமுமில்லையென்பது பழமொழி. ஆகவே, சங்கரனைச் சங்காரக்கடவுளென வேதம் கூறி மகிழும். எவன் சங்கரிக்கிறானோ அவனே ஆக்குவான். "அந்தம் ஆதி என்மனார் புலவர்" என்பது சிவஞானபோதம். இத்தனையும் உரை. உரை வியாபகம். கருதலும் காண்டலும் வியாப்பியம். ஸ்ரீ சிவபிரானே முழுமுதற் கடவுள் என்பது இவ் வியாப்பிய அளவைகட் கெய்தாது; அவ் வியாபக அளவைக்கே யெய்தும். காண்டல் கருதல்கள் அறியாதன யாவை, அவற்றை அறிவிப்பதே சாத்திர விலக்கணம். 'எய்தாததனை எய்துவிக்கின்றே சாத்திரம் பயன் படுவது" என்பது சைவ பாஷ்யம். சிவபரத்துவ நிரூபணத்துக்கு வியாபக அளவையைப் பற்றியே தீரவேண்டும். தம்மளவில் வலியற்ற வியாப்பிய அளவைகள் அப்போதுதான் சிறிதேனும் உதவி புரியும். ஸ்ரீமத் சிவஞான சுவாமிகளும் "ஆகம வளவை சார்பாகத் தலைநின்று வழியளவையான் ஆராய்க" எனப் பணித்தார்கள். உலகமும் சிவமூர்த்தியைச் சுட்டுவது அந்த வியாப்பியம் பிரமாணப் பிரயோகத்திற்றான். ஆகவே, சைவப்பிறப் பெய்தியவன் வேதத்தைக் கௌரவித்தே கௌரவமடைய வேண்டுமென்பது திண்ணமாயிற்று.

பரதகண்டம் தெலுங்கம் வங்கம் மராடம் எனப் பல நாடுகளாகப் பிரியும். அவற்றுள், அநேகத்துக்குச் சொந்த மொழிகள் உள. ஒவ்வொருமொழியும் எண்ணற்ற சைவநூல்களை யுடையது. திராவிடத்தில் திருமுறை சித்தாந்த சாத்திரம் முதலியன வில்லையா? ஆனால், சைவம் அந்நாடுகளில் எதற்குந் தனியாகச் சொந்தமன்று; பரதகண்ட முழுவதற்குமே சொந்தம். ஆகலின், அச்சமயத்துக்கு ஒருநாட்டு மொழியிலுள்ள சைவநூல்கள் பரமப் பிரமாணமாகா. அக்கண்டத்து மொழியிலுள்ள சைவநூல்களே அத்தகைய பிரமாணமாதற் கேற்புடையன. ஆரியமே பரதகண்டத்துமொழி. அம்மொழியிலுள்ள இருக்காதி வேதங்கள்தான் சைவசமயத்துக்குப் பரமப் பிரமாணம். தெலுங்கம், வங்கம், மராடம் முதலிய எல்லா நாட்டுச் சைவர்களும் அவ்வுண்மையை அங்கீகரித்துளார். அப்படியே தமிழ்நாட்டுச் சைவர்களும் அங்கீகரிக்கக் கடன்பட்டனர். "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க" "வேதப் பயனாஞ் சைவம்" "பழைய வைதிக சைவம்" "ராஜாங்கத் தமர்ந்தது வைதிக சைவம்", "வேதமென்னும் பாதபம் வளர்த்தனை, பாதப மதனிற் படுபயன் பலவே, அவற்றுள்............சைவசித்

தாந்தத், தேனமு தருந்தினர் சிலரே" என்னும் ஆன்றோருரைகளும் அதனை வலியுறுத்தும்.

மக்களை ஒன்றுபடுத்துவது நாட்டுப் பற்றன்று, மொழிப் பற்றன்று, சாதிப் பற்றன்று, சமயப் பற்றொன்றே. துருக்கரையும் அரபியரையும் இந்திய மகமதியரையுஞ் சேர்த்துவைப்பது இசுலாமன்றோ? க்ரூஸேட் யுத்தத்தில் கிறிஸ்தவம் ஐரோப்பா கண்டத்துப் பல தேசங்களையும் ஒருப்படுத்தவில்லையா? இன்றும் பரதகண்டத்துப் பல நாடுகளை இந்து என்னும் ஒருவகை மதம் சேர்த்துப் பிணிக்கின்றது. அப்படியே சைவமும் பலநாட்டினரையும் நாளிதுவரை ஒன்றுபடுத்தி வருகின்றது. அவ் வன்மை அதற் கெப்படி வந்தது? அதன் பிரமாண நூல் வடமொழி வேதமாயிருப்ப தொன்றாலேயாம். ஆனால், சில காலமாக இந்நாட்டில் ஒருவகைத் தமிழர் உற்பவித்திருக்கின்றனர். அவர் கொஞ்சந் தமிழ்கற்றவர்: சைவரெனவுந் தம்மைச் சொல்லிக்கொள்வர். ஆனால், மேலுண்மைகள் அவர் தலையிற் புகா. அதனால், மாறான கொள்கைகள் அவரிடமிருந்து பிரசுரமாகின்றன. அவை வலியுறும் வண்ணம் அவர் பல வினைகளையும் ஆற்றி வருகின்றனர். "வடமொழிவேதம் சைவத்துக்குப் பிரமாணமில்லை. அந்தச் சமயம் இந்தத்தமிழகத்துக்குச் சொந்தம். இங்கிருந்து தோன்றிய சைவத்தை மற்ற நாட்டினர் பற்றலாயினர்" என்றொரு புதுக்கொள்கையை அவர் சிருட்டித்துத் தமிழகத்திற் பரப்பத் தொடங்கியுள்ளார். இவ் விபரீதத்தால் வரும் விநாசம் அப் புதுத்தமிழர்க்கு மட்டுமன்று. தமிழகத்துச் சைவசமூகத்தையே அதுபீடிக்கின்றது. மற்றநாட்டுச் சைவ சமூகங்களோடு இந்நாட்டுச் சைவசமூகத்துக்குத் தொடர்பு தொன்று தொட்டது. அக் கொள்கையால் இத் தொடர்பு அறுபடும். அதனால், வருங் கஷ்ட நஷ்டம் சாமானிய மன்று.

உலகில் நல்ல நூல்களே யுள்ள மொழியும், கெட்ட நூல்களே யுள்ள மொழியும்உண்டா? இரண்டுங்கலந்த மொழிகளேஎல்லாமும். இது கண்கூடு. இன்றேல், 'கற்க கசடறக் கற்பவை' 'அமைவுடைய கற்பவே' என்பனவாய ஆணைகட் கவசியமில்லை. வடமொழியில் எண்ணற்ற கலைநூல்கள் மலிந்து கிடக்கின்றன. அம்மலிவைத் தமிழ்உள்பட வேறெம் மொழியிலுங் காண்டலரிது. பழங்காலத் தமிழச் சைவபண்டிதரெல்லார்க்கும் அத்தெய்வ பாஷையில் பழக்கமும் மதிப்பும் மிக்கிருந்தன. இல்லாவிடில் வேதாகம புராணேதிகாசங்களது இத்துணைத் தமிழப் பெயர்ப்புகளுக் கிடமேது? அத் துவிபாஷிகளது அறிவாராய்ச்சியால் தமிழுஞ் சைவமுஞ் சேரத்தழைத்தன. ஆனால், இப்புதுத் தமிழர் அச் சகல கலாமயமாகிய வடமொழியைத் தூற்றுகின்றனர். பார்ப்பனர் 'வடமொழி தேவபாஷை. சூத்திரர் அதனைப் பயிலக்கூடாது. அன்றியும், அவர் அம்மொழி



யைச் செம்மையாக உச்சரிக்கவுமாட்டார்.' என்று பேசித்தமிழச் சைவசமூகம் வடமொழியைக் கல்லாதவாறு தடை செய்கின்றனர். இப் புதுத்தமிழரோ, 'வடமொழி மிலேச்சபாஷை. எல்லா அறிவு நூல்களுந் தமிழிலேயே யுள்ளன. அன்றியும், அவ் வடமொழி கடினவுச்சரிப் புடையது. அதனைத் தமிழர் படித்தால் அவர்மூச்சே போய்விடும்.' எனக்கூறி அச்சமூகத்தை வழிமறிக்கின்றனர். இவருள் வடமொழி பயின்றவர் மிகமிகச் சிலரும் அகப்படார். ஒருவரிருவ ரகப்படினும் அவர் அதிற் குற்றங்காணவே பயின்றிருப்பர். சைவத்தைப் போற்றும் நோக்கம் அவர் பயிற்சிக்கில்லை. சைவஸ்தாபனத்துக்கு வடமொழிப் புலமை யொன்றே இன்றியமையாக் கருவி. தமிழ் முதலிய பிறமொழிப்புலமை சிறிதே உபகரிக்கும். இன்றுவரைச் சைவஸ்தாபனம் பண்ணிய புண்ணியவான்களுள் வடமொழிப்புலமை யில்லாதவர் ஒருவரேனும் உளரா? தமிழ்மட்டுங் கற்ற எவனோ அவ்வீரச் செயல் புரிந்துளான்? பொய்யா மொழியார் கூறிய, "கற்பவை" என்றதனுள் வேதாகமங்களும், நீலகண்ட சிவாக்ர பாஷ்யங்களும், அப்பைய தீக்ஷிதர் சாத்திரங்களும், அரதத்தர் நூல்களும், பௌஷ்கராகம விருத்தியும் அடங்காவா? சைவம் இவற்றிற்காட்டிலுமா தொல்காப்பியத்திலும், மணிமேகலையிலும், சிலப்பதிகாரத்திலும், புறநானூற்றிலும் பிரகாசித்து விட்டது? நம் புதுத் தமிழர் தமிழி லிருந்து விட்டதனாலேயே தடிக்கழுதை பாட்டையும், தங்கந்தில்லாலப் பாட்டையுமே, வண்டமிழ் ஒண்டமிழ் தண்டமிழ் எனக் கொண்டாடி மகிழுஞ் சுபாவமுடையவர். ஆகலின், வடமொழிவேதாகமங்களின் விளைவை இனிச் சைவ சமூகம் அநுபவித்தல் கூடாதென்ற எண்ணத்தோடு அவர் அச் சமூகத்தின் வீரியத்தை உறிஞ்சிவர லாயினர்.

தீண்டப்படாதாரின் ஆலயப் பிரவேசப் பிரசினை தீவிரமாயிருக்கின்றது. ஆலயங்கள், தொல்காப்பியம் சீவகசிந்தாமணி கம்பராமாயணம் முதலியவற்றின்படி கட்டப்பட வில்லை. பிரதிஷ்டை, பூசை, உத்ஸவம், தரிசனம் முதலிய விதிகள், குறள், நாலடி, கலித்தொகை, அகநானூறு முதலியவற்றிற் காணப்படா. ஆலய சம்பந்த விஷயங்களனைத்துக்கும் ஆகமங்களே ஆகரம். புதுத் தமிழர் அவ்வாலயப் பிரவேசத்துக்கு அநேகமாய் அநுகூலமானவர்தான். ஆயினும், கோயிலொழுங்காய ஆகம வாக்கியங்களை எடுத்தாண்டு தங் கொள்கையை நிலையிடுவதே அவர்கடன். அப்போதுதான் அவர் பேச்சுக்கு மதிப்பு முண்டு. ஆனால், அவர்க்கு வடமொழியும் வேதாகமங்களும் வேப்பங்காய். அது அவரது பிறப்பியல். ஆகலின், அவர் தமிழ்நூல்களில் தமக்காதரவான மேற்கோள்களைத் தடவித் திரிவா ராயினர். ஆலயப் பிரவேச விஷயமோ அகில பாரத சம்பந்த முடையது. இவரது தமிழ்நூ லாதரவை அகில பாரத வைதிக சைவ சத்துக்கள் எப்படி மதிப்பர்? வடமொழி நீங்க

கர்க்கு இத்தகைய கிளர்ச்சிகள் வெட்கக்கேட்டை யுண்டுபண்ணுகின்றது. தனித்தமிழ் வந்தனை அக் கேட்டை நீக்கவும் வல்லதோ?

சாத்திரம், தோத்திரம், விதி, சரிதம் எனச்சமயநூல்கள் நால்வகை. சாத்திரத்தில் ஞானம் மிகுதி. தோத்திரத்தில் பக்தி மிகுதி. விதியில் கிரியை மிகுதி. சரிதத்தில் ஞானம், பக்தி கிரியையாகிய மூன்றும் சமம். சாத்திரத்திற் கண்ட பக்தி கிரியைகளை முறையே தோத்திரத்திலும் விதியிலும்வைத் தறிய வேண்டும். தோத்திரத்திற் கண்ட ஞானங் கிரியைகளை முறையே சாத்திரத்திலும் விதியிலும்வைத் தறிய வேண்டும். விதியிற்கண்ட ஞானம் பக்திகளை முறையே சாத்திரத்திலும் தோத்திரத்திலும் வைத்தறிய வேண்டும். சரிதத்திற் கண்ட முப்பகுதிகளையும் அவ்வப் பகுதிக்குரிய நூல்களில்வைத் தறிய வேண்டும். ஆலய தரிசனம் கிரியாபாகம். ஆகலின், ஆலயப் பிரவேசத்துக்கு விதிநூல் மேற்கோள்களே வலியுடையன. புதுத்தமிழர் தமிழிலேனும் அத்தகைய விதிநூல் மேற்கோள்களை எடுத்தாளுகின்றனரா? அதுவுமில்லை. அவரது ஆதரவுகளிற் பல அசைவத் தமிழிலக்கியங்களி லுள்ளன. "கோத்திரமுங் குலமுங் கொண்டென் செய்வீர்", "சாதிகுலம் பிறப்பென்னுங் கடஞ்சுழி" முதலியன தோத்திரநூல் வாக்கு. இவை அங்கு இயைபு குறித்தல் இடைப்பிறவரல் முதலியன பற்றி வந்தன. தவறிய முறையில் சரிதங்களை ஆதரவாக்கி அவர் மானபங்க மடைகின்றனர். திருத்தொண்டர் திருவந்தாதியிலுள்ள 'நூல் போன சங்கிலி' யென்பதை அறுதலி மணாளராகிய புதுத் தமிழர் எடுத்துக்காட்டிச் சைவத்தில் அறுதலி மணங் கொள்ளப் பட்டதே யெனச் சொல்லி வருகின்றனர். பரவை நாச்சியார் சரிதத்தை விபசாரி மணாளராகிய புதுத் தமிழர் எடுத்துக்காட்டிச் சைவத்தில் விபசாரிமணங் கொள்ளப்பட்டதே யெனப் பேசிவருகின்றனர். இப்போது திருநாளைப்போவாரின் சரிதத்தைத் தீண்டப்படாதாரின் ஆலயப் பிரவேசப் பிரியராகிய புதுத் தமிழர் எடுத்துக் காட்டிச் சைவத்தில் அவ் வாலயப் பிரவேசங் கொள்ளப்பட்டதே யென வுரைக்கின்றனர். நாளை இயற்பகை நாயனாரின் சரிதத்தைப் பெண்டாட்டியைக் கூட்டிக்கொடுப்பவராகிய புதுத் தமிழர் எடுத்துக்காட்டிச் சைவத்தில் பெண்டாட்டியைக் கூட்டிக்கொடுப்பதுந் தருமந்தானென்று ஏன் பேசமாட்டார்? மற்றப் புதுத் தமிழர் அதனையும் ஏற்கவேண்டும். அதற்குத் தயார்தானா? உண்மையில் நாயன்மாரின் சரித ரகசியம் சைவ சநாதனிகளுக்கே தெரியவல்லது.

ஆலயப்பிரவேசப் பிரியராகிய புதுத் தமிழரில் இருவகையார் உளர். சாதி வித்தியாசம் வேண்டும்; தீண்டாமை வேண்டாம் என்பர் ஒருவகையார். சாதி வேற்றுமையே வேண்டா மென்பர் மற்றொரு வகையார். சென்னைச் சைவசித்தாந்த மகா சமாஜத்தின்



ஆண்டுவிழாக் கூவத்தில் நடந்தபோது தலைமை வகித்த திரு M. V. நெல்லையப்பபிள்ளை யென்பார் அவ் விரண்டாம்வகையைச் சேர்ந்தவர்போலும். இவர் ஒரு படுகிழவர். தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்கும் இவர் தங் கிழத்திற்றான் தலைவரானார். இவரது இளமை பிரமஞான சபைக்கு உறுப்பாயிருந்து கழிந்தது. இப்போதும் வசந்தம்மையாரது பாதசேவை அவரை விட்டதாகத் தெரியவில்லை. சைவ சபைகளில் தலைமை வகிக்குந் தரம் இவர்க்கு எம்மட்டி லுண்டென்பது வேறு விஷயம். இவர் கூவக்கூட்டத்தில் தலைமைதாங்கிப் பேசிய வுரைகளில் சைவ விரோதமானவை பல. அவற்றுள் தமிழ்நாட்டில் பழங்காலத்தில் பிறப்புப் பற்றிய சாதி வேற்றுமை இருந்ததில்லை யென்று அவர் கூறியது ஒன்று. அஃதுண்மையாகவே யிருக்கட்டும். குலஸ்திரீ மகன் விபசாரி மகன் என்ற பிறப்புவேற்றுமை கூடவா இங்கு அப்போது இல்லாதிருந்தது? எந்தக் குலஸ்திரீமகன் விபசாரிமகளை மணந்தான்? எந்த விபசாரி மகன் குலஸ்திரீ மகளை மணந்தான்? இந்தவிதமான கொண்டுகொடுத்தல் நடந்திருக்குமாயின் கற்பு மாண்பு தமிழ்மகளிர்பா லில்லை யென்பதே சித்தமாகும். நடவாதிருந்தால் பிறப்புப் பற்றிய சாதி வேற்றுமை இருந்ததென்பதே சரதம். கூவக் கூட்டத் தலைவர் ஆலயப்பிரவேசத்தி லாசைகொண்டு சைவத்தை வளர்ப்பவர்போல் நடித்துப் பழந் தமிழ்நாட்டை மிருகலோகமாக்கித் தமிழ்மங்கையர் கற்பை யழித்துச் சைவசமூகத்திற்கு மானக்கேட்டை யுண்டாக்கப் பார்க்கிறார்.

கிழவர் கதை யிவ்வாறாகச் சென்னையிற் சின்னாட்கு முன்னர் சைவ இளைஞர் மகாநாடொன்று கூடியது. இச் சிறுவரும் அக் கிழவர் வழியினரே. இவர், 'உடம்பு மூழ்கித் திருநீறிட்டுத் திருக் கண்மணிமாலை யணிந்து திருவைந்தெழுத் தோதித் தூயராய் வரும் முதல் திருடரை (ஆதி இந்துவை)க் கோவிலிற் சேவிக்க விடலாம்' எனத் தனித் தமிழ்த் தீர்மானமொன்று அக் கும்பலில் நிறைவேற்றினார். ஓர் ஆதியிந்து கோயிலில் நுழையும்போது அத்தனை யிலக்கணங்களையுங் கண்டனுமதிக்கக் கோவில் வாசலில் ஓராள் வேண்டும். மேற்கண்ட விலக்கணங்களில் ஒன்றுமே யில்லாமல் எத்தனையோ மேற்சாதியினர் கோவிலிற் பிரவேசிக்கின்றனர். அவரை அத் தீர்மானப்படி அந்த ஆள் தடுக்கவேண்டும். தடுத்தால் அந்த ஆளை அவர் சும்மா விடுவாரா? தடாவிடில் அவ் வாதியிந்து சும்மா விடுவானா? அவருக்கில்லாத நிபந்தனை தனக்குமட்டு மேனென்று அவன் கேட்கவே செய்வான். இச் சிறுவர்க்குக் காந்தி பெரியவர்தான். கோவில் அவருக்கு அவசியமில்லை. ஒருக்கால் அவரும் அதிற் பிரவேசிக்க ஆசைப்பட்டால் இத் தீர்மானம் அவரையும் தடுக்கும்.

சென்னையில் சில மாதங்களாகக் காமகோடி பீடச் சங்கராசாரியார் வடமொழியிற் செறிந்து கிடக்கும் அறிவுப்பொருளநேகத்தை அரிதில் திரட்டி எளிய தமிழிற் பிரசங்கமாரி பொழிந்து வருகின்றார். தமிழுக்கு அவ் வுபந்யாசமஞ்சரி ஒரு புதுச் செல்வம். அதிற் சைவர்கள் மறுக்கவேண்டுவன இரண்டொன்றே. ஆயினும், அது அதி முக்யம். 'ஆதி சங்கராசாரியர் சிவாவதாரம்; அரியுஞ் சிவனு மொன்று; நானே பிரமம்.' என்று அவர் கூறிய பகுதிகள் சைவ விரோதம். அச் சைவச் சிறுவர் உண்மையிற் சைவப் பற்றுடையராயின் அவ் வசைவக் கொள்கைகளைக் கண்டித்துத் தீர்மானஞ் செய்திருக்க வேண்டும். ஆனால், அவர் அவ் விஷயத்தை மெல்ல நழுவ விட்டனர். சங்கராசாரியர் தமது பிரசங்க மொன்றில், 'இந்துமதம் மிருக பலியைச் சம்மதிக்காது.' என்று சொன்னார். அச் சிறுவர்குழு அதனைக் கண்டித்து மற்றொரு தீர்மானம் நிறைவேற்றியது. அதுவும் ஒரு தீரந்தான். குழந்தைகளிடம் அதனினும் மேம்பட்ட வொன்றை எதிர்பார்க்க முடியாது. ஆனால், அவ் வாசாரியர் அதனை இந்துமத தர்மமென்றாரே யன்றிச் சைவசமயதர்ம மென்றிலர். இந்து மதத்தில் சாக்தேயஞ் சேராதா? அதில் மிருக பலியுஞ் சுராபானமும் அநுமதிக்கப் படவில்லையா? அச் சைவ இளைஞர்க்கு எம்மத தந்திரங்களையும் அறிந்து கொள்ள வழியில்லை. ஆதலின், அவர் அத் தீர்மான விளையாட்டை மேற்கொள்ள நேர்ந்தது. செய்ய வேண்டியதைச் செய்யாமலும், செய்ய வேண்டாததைச் செய்தும், அவ் விளைஞர் தம் இளமையைப் பயனின்றிக் கழித்தால், முதுமையில் அந் நெல்லையப்ப பிள்ளை போல் ஆய்விடுவர். அப்பால் திருந்துவதற்கு ஆயுசில்லை.

சைவஸ்தாபனம் சாமானிய மன்று. தேர்ந்த சாமர்த்தியம் வேண்டும். தமிழ்ச் சைவருள் அத் தகைய சமர்த்தர் ஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்களோடு முடிவடைந்தனர். அப் பெரியார்க்குப் பின்னால் அப் பஞ்சம் நாளிது வரைத் தீரவில்லை. அது யாரிட்ட சாபமோ? முட்புதரிலகப்பட்ட பசுங் கொடி கிழிபடாம லிருக்குமா? அப்படியே சைவமும் புதுத் தமிழரது கையி லகப்பட்டு உருக்குலைகின்றது. அவரது படாடோபமோ வெகுபயங்கரம். சென்னைச் சைவ சித்தாந்த மகாசமாஜ ஆண்டு விழா திருப்பாதிரிப்புலியூரில் நடந்த போது திரு. மறைமலையடிகள் தலைமை வகித்து நீண்டதோர் காமப் பிரசங்கஞ் செய்தார். அதுவே அவ் விழாவின் தலைமைப் பேருரை. ஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்களுக்குச் சீடத்துவம் பூண்ட வடிகள் ஒரு சைவ சபையின் விழாக் காலத்தைக் காமப் பேச்சிற் கழித்தாற் சைவங் கடைத்தேறுவ தெப்படி? அச் சமாஜ காரியதரிசி திரு. பாலசுப்பிரமணியமுதலியார் அழு இழு உழு எழு தொழு; கொக்கரகோ, காகா வெனப் பரிகாசப் பிரசங்கங்கள் பல புரிகின்றனர். பரசமயத்தார் கண்டு பரிகசிக்கும் நிலையிலிருக்



கிற சைவர்க்குப் பரிகாசப் பிரசங்கமேன்? திரு. R.P. சேதுப்பிள்ளை B. A. B. L. என்ன காரணத்தாலோ வக்கீல் வேலையை விடுத்து வாத்தியார் வேலைக்கு வந்து கம்பராமாயணத்திலுள்ள சிலபாக்களுக்குப் பொழிப்புரையோ கருத்துரையோ கண்டு, "இந்த நயம் உள்ளத்தை அள்ளுகின்றது. இச் செஞ்சொல் ஓவியம் நெஞ்சத்தை மகிழ்விக்கின்றது!" எனக்கூறி ஆனந்தித்த வண்ணமாயிருக்கிறார். கந்த புராண நயத்தைக் கண்டு வெளியிட அவருக்கு எண்ணமில்லையே. கந்த புராணத்தில் நயமில்லையா? அல்லது, அதைக் காணும் வன்மை அவருக்கில்லையா? திரு. K. சுப்பிரமணிய பிள்ளை M.A.M.L. வக்கீல் வேலையை விட்டு வாத்தியார் வேலைக்கு வந்து முடிவில் அதனையும் விடுத்துத் தாமெழுதிய புத்தகங்களை விலைகூறிவருவதாகக் கேள்வி. அப் புத்தகங்கள் சைவப் புத்தகங்களாயின் அதுவுஞ் சிவ பணிதான். ஆனால், திருநான்மறை விளக்க வாராய்ச்சி முதலிய நன்னூல்கள், அவற்றைப் பூர்வபக்கப்படுத்தி நாளிது வரைச் சித்தாந்தங்களாய் நிலவுகின்றன. திருநெல்வேலி ஜில்லா ராசவல்லிபுரத்துச் சிவாலயத்தில் ஒருசமயம் நீலகண்ட சிவாசாரியர் பிரதிஷ்டைக்கு ஏற்பாடாயிருந்தது. காருடை சூரியமூர்த்திப்பிள்ளை யென்னுமொரு தபாலாபீசுக்காரர் வடமொழி வல்ல ஒரு சநாதனச் சைவத் தமிழரிடம் அதைத் தெரிவிக்க அப் பெரியார் அப் 'பிரதிஷ்டையைச் சைவ விரோத மென்றார்கள். உடனே அப் பெரியாரின் பெருந் துணைகொண்டு அத் தபாலாபீசுக்காரர் துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டு அப் பிரதிஷ்டையைத் தடுத்துவிட்டனர். வைதிக சைவத்தோடு சிறிதே வேறுபட்டவர் அந் நீலகண்டர். அவரது பிரதிஷ்டையில் அத் தபாலாபீசுக்காரருக்கு அவ்வளவு ரோஷ மிருந்தது. அஃது ஒருகாலம். இப்போது அச் சூரியமூர்த்திப் பிள்ளை ஞாயிற்றுருவினனாய் மாறித் தீண்டப்படாதார்க்கு ஆலயப் பிரவேசம் வேண்டு மென்கின்றார். இனிச் சிவாலயங்களில் காந்தி, பிர்லா, ஸி. ராஜகோபாலாச்சாரி, ஸி. எஸ். ரெங்கையர் முதலியவர்களைக் கொண்டுபோய் நட்டுவைத்தாலும் அவ் வுருவினனுக் காநந்தமே. அவருக்கு அந்த ரோஷமிருந்தகாலத்தில் வடமொழியிற் படிப்பில்லாவிட்டாலும் பற்றிருந்தது. இப்போது அப் பற்றும் போய்விட்டது. கருத்து மாறியது; பேர் மாறியது; உரு மாறவேண்டுவது மட்டும் பாக்கி. திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரை அநேகமாய் எல்லாரும் அறிவர். ஒருகாலத்தில் அவர் தீவிர சைவராயிருந்தார். இப்போதும் அவர் சைவ சபைகளில் தலைமை வகிப்பதும், பிரசங்கம் புரிவதும் உண்டு. ஆனால், அவர் எழுதி வெளியிட்ட புத்தகங்களில் 'மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும்' என்பதொன்று. தமிழ்ச் சைவர் காந்தியின் பாதச்சுவடுபற்றி ஒழுகவேண்டுமென அவர் அதிற் கூறுகின்றார். அப்படியானால் தமிழ்நாட்டில் ஒருவனாவது சைவனாயிருப்பானா? அது எப்படிப் போனாலென்ன? முதலியார்

186925

காலத்தை அநுசரிக்கின்றார். இன்னும் பல புதுத் தமிழரைப்பற்றி இப்படியே எழுதலாம். இங்கு வேலை அதுவன்று. சைவ சமயத்துக்கு அன்னார் செய்யும் ஊழியங்களிவை யென்பதைச் சைவசமூகத்துக்குத் தெரிவிக்க வேண்டாமா? அதற்காகத்தான் சிலரது வினைகள் எடுத்துக் காட்டப்பட்டன. சைவ ஸ்தாபன யோக்கியர் வரவாகிய விடியல் இச் சமூகத்துக்கு என்றோ?

தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தற்சமயம் அப் புதுத் தமிழர்க்கு ஒரு பேரரண். அது செய்துவரும் வேலைகளை ஆராய்ந்தால் அவரது போக்கு மேலும் விளங்கும். அதன் பெயரிலிருந்து அது சைவ வளர்ச்சிக்குண்டாயினதெனத் தெரியலாம். ஆனால், தமிழை வளர்க்கவே அது சிறிது உழைக்கின்றது. துட்டுச் சம்பாதிப்பதிலும் அதற்குச் சமீபத்திலாசை. சைவ சமயத்துக்குத் தமிழ் வசன நூல்கள் மிகவுந் தேவை. சபாபதி நாவலரவர்கள் நடத்திய ஞானாமிர்தம், தாமோதரம்பிள்ளை யவர்கள் நடத்திய ஞானசித்தி, சோமசுந்தர நாயகரவர்கள் நடத்திய சித்தாந்த ரத்னாகரம் முதலிய சைவப் பத்திரிகைகளில் அத் தீரர்கள் எழுதிய கட்டுரைகளும் நூல்களும் எத்தனை? அவையெல்லாம் மறையுங்கருவாயிலிருக்கின்றனவே. கழகம் அவற்றுள் அகப்பட்டவற்றை யெல்லாந் திரட்டிக் கோவை செய்து அச்சிட்டால் சைவத் தமிழ்வசன நூற்பஞ்சந் தீராதா? ஆனால், வண்ணாரப் பெரியாண்டியை யச்சிடுவதில் அதற்கு போகம். என்ன செய்யலாம்.?

தமிழ்ச் சைவ சமூகத்துக்குச் சிவாக்கிர யோகிகள் சரிதந் தெரியாது. நீலகண்ட சிவாசாரியார் சரிதம் தெரியாது. அப்பைய தீக்ஷிதர் சரிதந் தெரியாது. திரிலோசன சிவாசாரியார் சரிதந் தெரியாது. சோமசுந்தர நாயகரவர்கள் சரிதந் தெரியாது. சபாபதி நாவலரவர்கள் சரிதந் தெரியாது. மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் சரிதந் தெரியாது. வேங்கடரமணதாசர் சரிதந் தெரியாது. கழகம் அவைகளைக் கண்டெழுதி அச்சிடலாகாதா? சைவசமூகம் அவற்றை வாசித்தால் மனோத்ஸாக மடையாதா? ஆனால், அப் புத்தகசாலை அல்வாக் கதையை யச்சிட்டுச் சந்தோஷத்தை யடைந்துக்கொள்கின்றது. அல்வாவால் உண்டாகத்தக்க உத்ஸாகமு மிருக்கத்தானே செய்கிறது.

பௌஷ்கராகமவிருத்தி, பிரமதருக்கஸ்தவம், வேதபாதஸ்தவம், சிவகர்ணாம்ருதம், ஹரிஹர தாரதம்மியம், ராமாயண தாற்பரிய சங்கிரகம், பாரத தாற்பரிய சங்கிரகம், சித்தாந்த சாராவளி, சோமசம்பு பத்ததி முதலியன வடமொழியிலுள்ள சைவ ஸ்தாபன நூல்களல்லவா? சைவசமூகம் அவற்றைப் படிப்பது அவசியமன்றோ? படித்தால் உருப்படாதோ? கழகம் அவற்றை மூலத்திலோ, பெயர்ப்பிலோ, இரண்டிலுமோ அச்சிட்டாலென்ன? ஆனால், அது பொன்கதைக்கொத்தை யச்சிட்டுப் பொன்திரட்டப் பார்க்கின்றது.



சைவத்தில் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கும் முத்திசாதனங்கள். ஞானநூல்கள் தமிழிற் சிலவிருக்கின்றன. முதல் மூன்றையும் பற்றிய நூல்கள் எவை? தலபுராண முதலியவற்றில் அவை ஆங்காங்குச் சிறிது காணப்படலாம். தமிழ்ச் சைவ சமூகத்துக்குக் கலியாணம், இழவு, சீமந்தம், சிராத்தம், தீக்ஷை, உத்ஸவம், அஷ்டபந்தன கும்பாபிடேகம், அஷ்டாங்க யோகம் முதலியவற்றின் விதிமுறை தெரியுமா? இன்னுந் தெரியாத சரியை கிரியை யோக பாகங்கள் எத்தனை? எல்லாவற்றிற்கும் பொக்கிஷமாயுள்ளன சிவாகமங்களும் பத்ததிமுதலியனவுமே. சைவசமூகம் அவற்றை யெல்லாம் அறிய ஆசைப்படாதா? அறிய வேண்டாமா? கழகமோ அவற்றுள் எந்தப் பகுதியையும் எடுத்து அச்சிடவில்லை. ஆனால், அக் கலியாண முதலியவற்றை மனம் போனபடி செய்வாரைப் புகழ்ந்தெழுதி அதுகளிக்கின்றது. மனம் போன போக்கெல்லாம் போனால் சைவம் எப்படிவளரும்?

அறஞ்செய விரும்புக்கும், ஆறுவது சினத்துக்கும், ஆறுமுக நாவலரவர்கள் அரியவுரை அன்றே எழுதியுள்ளார்கள். அது பலமுறை அச்சேறிப் பரவிவருகின்றது. மற்றுமொரு திரு. வேங்கடசாமி நாட்டாருரை அப் பாக்களுக்கேன்? நாவல ருரையினும் நாட்டாருரை நயங் கொண்டது மன்று. கழகம் நாட்டா ருரையை யச்சிட்டு விற்கின்றது. அது வீண்காலப் போக்கன்றோ? திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீன மகா வித்வான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரப் பிள்ளை யவர்களது மாணாக்கராகிய சோடசாவதானம் ஸ்ரீ தி. க. சுப்பராயசெட்டியா ரவர்கள், பரஞ்சோதியார் திருவிளையாடலுக்கு நல்லுரை யொன்றியற்றித் தங்காலத்திலேயே வெளியிட்டார்கள். அறிஞர் அவ் வுரையைக் கண்ணிலொற்றிக் கொள்கின்றனர். அவ் வுரைப் புத்தகம் இப்போது கிடைக்கவில்லை. சைவ சமூகம் அப் புத்தகத்துக் காசைப்படுகின்றது. கழகம் அதனை அச்சிட்டால் தரங்கெட்டாபோம்? துட்டும் நிரம்பக்கிடைக்குமே. ஆனால், அது அப்புராணத்துக்கு அந் நாட்டாரைக் கொண்டு ஒரு புத்துரை எழுதிவாங்கி அச்சிட்டு விலைகூறுகின்றது. செட்டியாருரையினும் நாட்டாருரை இன்ன வகையிற் செம்மையுடைத்தென்பது கழகத்துக்கே வெளிச்சம். இரண்டையும் ஆயும் பண்டிதர் செட்டியாருரையின் பிரதியே நாட்டாருரை யாதலையும், சில விடங்களில் முன்னவ ருரைநயம் பின்னவருரையிற் கெடுக்கப்படுதலையுங் காண்பர். நாட்டார் அவ் வுரை யெழுதிய காலத்தை வேறொரு நூலுக்கு உரை யெழுதிச் செலவிட்டிருக்கலாம். சைவத்துக்கும் பயனுண்டு. நாவலரது கந்தபுராணவசனத்தைப் பூர்த்தி செய்து ஒருவர் பெரியவரானார். அவரது பெரியபுராணசூசனத்தை

காட்டார் பூர்த்தி செய்து ஏன் அங்ஙனம் பெரியராகப் படாது? ஆனால், அவர்க்கும் கழகத்துக்கு முள்ள தொடர்பு எப்படியோ?

சென்னைச் சைவசித்தாந்த சமாஜத்தார் பன்னிருதிருமுறைகளையும் அச்சிட்டு அடக்கவிலைக்கு விற்க வெண்ணி அடங்கன் முறையையும், திருவாசக திருக்கோவைகளையும் புத்தகங்களாக்கி விற்று வருகின்றனர். அடங்கன் முறையின் விலை ரூபா இரண்டு. திருவாசக திருக்கோவைகளின் விலை அறு பத்தெனக் கேள்வி. அடங்கன் முறை அழகியது; அடக்கமானது. சைவத்துக்கு அவ் வெளியீடு நல்ல ஊழியம். ஆனால், கழகம் அடங்கன் முறையை யச்சிட்டு அதற்குச் சற்றேறக்குறைய இருபது ரூபா விலை போட்டிருக்கிறது. அதில் எல்லாப் புத்தகங்களுக்குமே விலை கோரந்தான். அவ் விலையால் தமிழ்தான் தழைக்குமா? அதனாற் கழகத்துக்குக் காசாசை யுண்டெனப் பிறர் ஏன் நினைக்கமாட்டார்? பொன்னெழுத்தழுத்தியது, படங்கள் நிறைந்தது, பட்டுக் கட்டடமுடையது, விலை ரூபா ஐந்து பத்து எனக் கழகம் விளம்பரஞ் செய்வதுண்டு. குப்பி கூழுக்கழுகின்றதாம்; கொண்டை பூவுக் கழுகின்றதாம். சைவம் வளர்ப்பாரின்றி வாடி நிற்கின்றது. சைவ சமூகத்தைப் பிறசமூகங்கள் உதாசீனம் பண்ணுகின்றன. இந்த நிலையில் அதற்குப் பொன்னெழுத்துப் புத்தகமும் வேண்டுமா? படம் போட்டபுத்தகமும் வேண்டுமா? பட்டுக் கட்டடப் புத்தகமும் வேண்டுமா? ஐந்து ரூபாப் புத்தகம் அரைரூபாவில் அகப்படுவதே போதும். ஆன்றோர் பரம்பரையில் வந்த பாடத்தை மாற்றியச்சிடாதபுத்தகம் அகப்படுவதே போதும். கழகத்துக்கு அவற்றை யெல்லாஞ் சிந்திக்குந் திறனில்லாமை பரிதபிக்கத்தக்கது. ஒரு காலத்தில் எமது நண்பரொருவர் கழகத்து முக்கியஸ்தரொருவரைக் கண்டு சில சைவவுரைநடை நூல்களைச் சுட்டி 'இவைகளை நீங்கள் இன்னும் ஏன் அச்சிட வில்லை?' எனக் கேட்க, அப் பெரியார் 'அவை சைவ நூல்களாயினும் வடசொற் கலந்தவை, தனித்தமிழ்ப் பற்றுடைய யாங்கள் அவற்றை யச்சிடோம்' எனவிடைபகர்ந்தனராம். என்னே! சைவத் துரோகம். அம்மம்ம! நினைக்கானும் நெஞ்சு வெடிக்கின்றது. அந் நண்பர் அதனை யெம்பாற் சொன்னதும் கழக வெளியீடுகளால் யாங்கொண்ட அநுமானம் உண்மையென வுறுதிப்பட்டது. இனியாயினும் கழகம் தனித்தமிழ்நூற் பதிப்புக் கழகமெனத் தன் பெயரை மாற்றிக் கொண்டால் சைவ சமூகம் ஏமாறாது.

## ஏ! புதுத் தமிழர்காள்!

உங்கள் மாறாட்டத்தை முழுவதும் எழுதுவதென்றால் இராமாயணமாகும். இங்குக் காட்டப்பட்டது கொஞ்சமே. எந்தக் தேசிய வாதியும் பாஷைவாதியும் ஜாதிவாதியும் மதத்தை விட்டுக்



கொடுக்கமாட்டார். நீங்கள் மட்டுமே அப்படிச் செய்கிறீர்கள். இப்போது சைவ சமயத்தை விட்டுச் சைவ சமூகம் விலகிக் கொண்டு போகின்றது. சிவபிரானே முழுமுதற்கடவுள்; பிரம விஷ்ணுக்கள் அவரடியரே யென்பது சைவசமய ஹிருதயம். சைவ சமூகம் 'அரியுஞ் சிவனும் ஒன்று; எல்லாம் நானே.' என்று முழு மாயாவாதம் பேசிவருகின்றது. விபூதி ருத்திராக்ஷங்களே சைவ சின்னம். சைவசமூகம் ஏகாதசி புரட்டாசிசனி முதலிய வைஷ்ணவ விசேடங்களில் நாமம் போட்டுக்கொள்ளுகின்றது. சிவபுராணபடன சிரவணங்களே க்ஷேமகரமென்பது சைவவிதி. வைஷ்ணவ கதைகளைக் காலக்ஷேபஞ் செய்யுஞ் சைவர் எத்தனைபேர்? கேட்டுப் பொழுதுபோக்கும் சைவர் எத்தனை பேர்? சிவன் திருவுருவைக் காண்பதே கண்ணுக்குப் பயனென்பது சைவவொழுங்கு. சைவ வியாபாரிகள் பிரசுரிக்கும் பஞ்சாங்கங் (காலண்டர்)களில் அநேகமாய் வைஷ்ணவபரமான படங்களே காணப்படுகின்றன. சைவச் செல்வர் வைஷ்ணவாலயங்களைப் புதுப்பித்துக் கொடுக்கவும் முன்வந்துவிட்டனர். இத்தகைய முறைக்கேடு வைஷ்ணவ முதலிய பிற சமூகங்களில் மிகவும் குறைவு. ஏ! தமிழச் சைவர்காள்! வந்தவருக்கெல்லாம் முன்றானை விரிக்குஞ் சுபாவம் வேசையர்க்கே யுண்டு. சைவசமூகம் எந்தச் சமயத்திலும் வீழலாமெனின் அதற்கும் வேசையர்க்கும் வேற்றுமை யில்லை. அம் முறைக்கேட்டால் அச் சமூகம் பாழாவதுந் திண்ணம். நீங்கள் ஏன் அவ் வுண்மையைச் சமூகத்துக் குணர்த்தலாகாது? இதனால், உங்களை மதவெறியரென்று யாருஞ் சொல்லார். சொன்னால் அவர் குடிவெறியரே. தேச வெறியரையும் பாஷை வெறியரையுஞ் சாதி வெறியரையுமே உலகம் மதிக்கத் தலைப்பட்டுவிட்டது. தேசம் மாயாகாரியம். பாஷை மாயாகாரியம். ஜாதி மாயாகாரியம். எல்லாச் சமயங்களும் மாயாகாரியம். வைதிக சைவமொன்றே ஞானகாரியம். ஆகவே, அதைத் தீவிரமா யபிமானிப்பது வெறியாகாது. சைவம், சைவசாத்திரம், சைவசமூகம் என்னும் இம் மூன்றும் ஒன்றையொன்று ஒட்டிக்கொண்டே யிருக்கவேண்டும். நீங்களோ ஒவ்வொன்றையும் பலபடியாகப் பிளக்கப் பார்க்கிறீர்கள். படித்த இரண்டொருவர் மாத்திரஞ் சைவப்பற்றுடையரா யிருந்துவிட்டாற் போதாது. சைவத்தைக் கொன்று தமிழை வளர்க்க உங்கள் தாத்தாவாலும் முடியாது. வடமொழி நிந்தனை சத்தியமாய்ச் சைவக் கொலையே. கபாடபுரத்தையுந் தென்மதுரையையும் வாரியுண்ட கடல் சமீபத்திலேயே யிருக்கிறது. சிவாக்கினைக் கஞ்சி நடவுங்கள். சைவத்தைப் போற்றின் தமிழ் தானே வளரும். சைவ சமூகம் அதனை உணரவேண்டும். உணர்த்தும் பொறுப்பு உங்களுக் கில்லையா? ஆனால், திண்டப்படாதாரின் ஆலயப் பிரவேசத்தில் உங்களுக்கு அநுதாபம் வந்துவிட்டது. ஆலயவிதி நூலாகிய ஆகமங்க

ளில் உங்களுக்கு எவ்வளவு பயிற்சி யுண்டு? ஐயோ! பகவத்கீதை, காமிகம், பராசரஸ்மிருதி, நையாயிகம், சாந்தோக்கியம் என்னும் வடமொழி நூல்களையும், அவற்றைப் பிரமாணமாகக் கொண்டு நடைபெறும் விவகாரங்களையும் கேட்டமாத்திரத்தில் நீங்கள் மிரண்டு மிரண்டு விழிக்கிறீர்கள். வெட்கம்! வெட்கம்!! இனியாயினும் வடமொழியை மதித்துப் படியுங்கள். சமூகத்தையும் படிப்பியுங்கள். உங்கள் பேச்சை அகில பாரதமுங் கேட்டுச் சைவத்தை ஆசரிக்க வேண்டும். குண்டு சட்டியில் குதிரை யோட்ட ஆசைப் படாதீர்கள். ஆகையால், இடபக் கொடியை உயரத்தில் உல்லாசமாய்ப் பறக்கவிட்டு, அதன் தண்ணிழலிற் கண்ணியமாய்ப் பிழையுங்கள்.

தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

---

# மணிமேகலை.

கோநகர். திருவாளர் சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார்.

மணிமேகலை யென்பவள், கோவலனுக்கு மாதவி யென்னும் நாடகக் கணிகையிடம் பிறந்தவள். கோவலன் பாண்டியனால் வெட்டுண் டிறந்தது கேட்டுப் பரத்தைமைத் தொழிலை நீக்கிப், பௌத்த சமயஞ் சார்ந்து, அறவணவடிகளா லுபதேசம் செய்யப்பெற்ற மாதவியோடு பௌத்தசங்கத்திலேயே யிருந்தவள். இவள் சரிதம், "மதுரைக் கூலவாணிகன் சாத்தனார்" என்னும் புலவர்பெருமானால், முப்பது காதைகளாகப் பகுக்கப்பெற்று, கதைபொதி பாட்டெனப் பெயர்பெற்றதோ ராசிரியப்பாவை முதலிற் கொண்டு, "மணிமேகலை" என்னும் பெயருடையதா யியற்றப்பெற்றுள்ளது. தமிழ்நாடு செய்த தனிப் பெருந் தவப்பயனாய்த் தோன்றிய மறைத்திருவாளர் மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதைய ரவர்கள் அதற்கு அரும்பதவுரை யெழுதி யன்புடன் அதனை வெளியிட்ட பேருபகாரம், தமிழ் நாட்டாரால் என்றென்றும் போற்றிப் புகழ்தற் குரியதாகும்.

இம் மணிமேகலையின் ஆசிரியராகிய சாத்தனார் கடைச்சங்கப் புலவருள் ஒருவர். நெல், புல், வரகு, தினை முதலாகச் சொல்லப்படுகின்ற தானிய வியாபாரஞ் செய்து வந்ததனாற் "கூலவாணிகன் சாத்தனார்" எனப் பெயர் பெற்றனர். இவர் சிறந்த வித்துவானாயிருந்தும், பிறரைப் பாடிப் பரிசுபெறுத லிழிவென வெண்ணியே வியாபாரத்தில் விழைவுடையராய் இருந்தனர்போலும். இச் சரித்திரம் நடந்த காலத்திலேயே இவரும் இருந்திருக்கிறார். இதனைக், கணவனை யிழந்த கண்ணகி சேரநாடு சென்று, நெடுவேள்குன்றத்து வேங்கைமரத்தடியில் தேவர்கள் போற்ற விண்ணு டடைந்த செய்தியை மலைவாணர் செங்குட்டுவனுக் குரைக்க, அவன் அப் பத்தினிப்பெண்ணின் சரித முழுது மறிய விரும்ப, அக்காலை யங்கிருந்த சாத்தனார், தம்மூரில் நிகழ்ந்ததாய கோவலன் கொலையுண்டது



முதலாயவற்றை அவனுக்குச் சொன்னமையா லறியலாம். இவருக்குச் "சீத்தலைச் சாத்தனார்" என்னுங் காரணப்பெய ரொன்று முண்டு. சங்கத்தி லரங்கேற்றப்பெறும் கவிகளிலுள்ள வழுக்களைக் கேட்கும்போதெல்லாம் வருத்தமுடையராய்த் தன் தலையிற் சீயுண்டாகக் குட்டிக்கொள்வாரென்றும், அதனாலேயே "சீத்தலைச் சாத்தனார்" என்னும் பெயர் வந்ததென்றுந் தெரிகிறது. இவர் பாடியனவாக அகநானூற்றில் ஐந்து பாட்டுக்களும், புறநானூற்றில் ஒருபாட்டும், நற்றிணையில் மூன்று பாட்டுக்களும், குறுந்தொகையில் ஒரு பாட்டும், திருவள்ளுவமாலையில் ஒரு பாட்டும் உள்ளன. செங்குட்டுவன் சகோதரராகிய இளங்கோவடிகளைச் சிலப்பதிகாரஞ் செய்தற்குத் தூண்டியவரும் இவரே. இந் நூலுள், புத்தர்பெருமானைப் பற்றிக் கூறவேண்டிய விடங்களிலெல்லாம் மிக மிகப் புகழ்ந்து, தெய்வபக்தி யில்லாதா னொருவன் மனத்திலும் அஃது உண்டாகுமாறு போற்றுவது, இவரது தெய்வங்கொள்கையை நன்கு விளக்குகின்றது. அவைகளுட் சிலவருமாறு:—

மாதவி, மணிமேகலையை மலர்வனம் புக ஏவிய ஞான்று, சுதமதி உவவனஞ் செல்லலாமெனக் கூறுங்கால், அவ் வுவவனத்துப் பூக்கள் பகவன தாணையாற் பூக்கின்றன வெனக் கூறுவதாகக் கூறும்,

"அருளு மன்பு மாருயி ரோம்பு
மொருபெரும் பூட்கையு மொழியா நோன்பிற்
பகவன தாணையிற் பன்மரம் பூக்கும்
உவவனம்" என்பதூஉம்,

உதயகுமரனிடத்துச் சுதமதி தன்வரலாறு கூறுங்கால், சங்கதருமன் செவி யறிவுறுத்திய புத்ததேவனின் பாதங்களையே தனது நா துதித்துக் கொண்டிருக்கிறதாகக் கூறுமுகத்தான்,

"எங்கோ னியல்குண னேதமில் குணப்பொரு
ளுலக நோன்பிற் பலகதி யுணர்ந்து
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாள
னின்பச் செவ்வி மன்பதை யெய்த
வருளறம் பூண்ட வொருபெரும் பூட்கையி
னறக்கதி ராழி திறப்பட வுருட்டிக்
காமற் கடந்த வாமன்" என்பதூஉம்,

"அமுதசுரபி" யென்னு மக்ஷயபாத்திரங் கிடைத்தவுடன், மணிமேகலை துதித்ததாகக் கூறும்,

"மாரனை வெல்லும் வீர நின்னடி
தீநெறிக் கடும்பகை கடந்தோய் நின்னடி
பிறர்க்கற முயலும் பெரியோய் நின்னடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி
யெண்பிறக் கொழிய விறந்தோய் நின்னடி
கண்பிறர்க் களிக்குங் கண்ணோய் நின்னடி
தீமொழிக் கடைத்த செவியோய் நின்னடி
வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி

நரகர் துயர்கெட நடப்போய் நின்னடி
யுரகர் துயர மொழிப்போய் நின்னடி
வணங்குத லல்லது வாழ்த்தலென் னாவிற்
கடங்காது" என்பதூஉம்,

அறவணவடிகள் கூற்றாக முப்பதாங் காதையிற் கூறும்,

"அறிவு வறிதா யுயிர்நிறை காலத்து
முடிதயங் கமரர் முறைமுறை யிரப்ப
துடித லோக மொழியத் தோன்றிப்
போதி மூலம் பொருந்தி யிருந்து
மாரனை வென்று வீர னாகிக்
குற்ற மூன்றும் முற்ற வறுக்கும்
வாமன்"

என்பதூஉம் அறிந்து இன்புறற்பாலன. புத்தர் சிறிதேனுங் காமவி கார மில்லாதிருந்தது குறித்தே, அவரைப் பல விடங்களில் மாரனை வென்ற பெருந்தகை யெனப் போற்றுகின்றார். பதிகத்துள்,

"கோணிலை திரிந்து கோடை நீடினுந்
தானிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை"

எனக் காவிரியின் வளத்தைக் கூறுங்கால், "என்றும் மாறாது தண்ணீ ரளிக்கு மியல்பினை யுடையது" என்பதை விளக்கப் புகுந்தவர், அரசர் செங்கோல் மாறுபட்டுக் கோடை மிகுந்தாலு மென்றதால், செங்கோனிலை திரியின் மழை பெய்யாதெனக் கொள்ளக்கிடக்கின்றது.

இந்திரவிழா, முற்காலத் தரசனொருவனாற் செய்யப்பெற்று, அதனைப் பின்பற்றி வழிவழியாகச் செய்யப்பட்டு வந்திருக்கின்றது. ஆனால், இக் காலத்தோ, "முன்னோர் மூடர், அவர் சென்ற வழி நாமுஞ் செல்லுதல் தகுதியன்று" எனக் கூறுகின்றனர். என்னே! இவர்தம் பேதைமை. முற் காலத்துப் பறை யறையுங்கால், ஊரை முன்னா வாழ்த்தி, வான மும்மாரி பொழியவேண்டி, அரசன் சொங்கோலின னாக வெனக் கூறி, அதன் பிறகே பறையறையுஞ் செய்தி பகர்வார்க ளென்பது,

"திருவிழை மூதூர் வாழ்கென் றேத்தி
வான மும்மாரி பொழிக மன்னவன்
கோணிலை திரியாக் கோலோ னாகுக"

என, இந்திரவிழாவைப் பறையறைந்து கூறுமுன் சொல்லியதால் தெரிகிறது. தெய்வ வழிபாட்டிற்குச் செய்யவேண்டிய வேலைகளை ஊரார் களுக்குக் கட்டளையிடுவது மிக நன்றா யமைந்துள்ளது.

இந்திரவிழாவிற்கு, மாதவியும் மணிமேகலையும் வாராமைகுறித்து, ஊரார் கூறும் பழிச் சொற்களைக் கூறிவரும்படி, சித்திராபதியா லேவப் பெற்ற வயந்தமாலையினிடத்து,மாதவி கணவ னிறந்தும் தான் உயிர்வாழ்ந் திருப்பதனைக் கூறும்,

"காதல ரிறப்பிற் கனையெரி பொத்தி
யூதுலைக் குருகி னுயிர்த்தகத் தடங்கா



தின்னுயி ரீவ ரீயா ராயி
னன்னீர்ப் பொய்கையி னளியெரி புகுவர்
நளியெரி புகாஅ ராயி னன்பரோ
டுடனுறை வாழ்க்கைக்கு நோற்றுடம் படுவர்
பத்தினிப் பெண்டிர்"

என்னும் பகுதியால், பத்தினிப் பெண்டிர் தம் கணவ னிறப்பின் உலையி லூதுகின்ற துருத்தியினது மூக்கைப்போல் நெருப்புண்டாக வுயிர்த்துத் தங்களுடைய இனிய உயிரை விடுவார்கள். இன்றேல்,குளிர்ந்த தண்ணீரி லிறங்குவதேபோல் நெருப்பி லிறங்குவார்கள். அதுவுமின்றேல், "வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட, வேளை வெந்தை வல்சியாகப், பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியு, முயவர் பெண்டிர்" எனப் புறநானூற் றிற் கூறியவாறே, 'மறுபிறப்பிலாயினு மிறந்த கணவனை யடையவேண்டு மெனக் கைம்மை நோற்பர்" என விளக்கி, விதவைகளை மூன்று பிரிவாக்க் கூறுதல் சாலச் சிறப்புடைத்தாம். இவர்களைத் தலைக்கற்புடையார், இடைக் கற்புடையார், கடைக் கற்புடையாரெனக் கூறலாம். இம் மூன்று நிலையு மின்றி வதிகின்ற பெண்களை யெவ்வாறு கூறுவதோ? வயந்தமாலை,இந்திர விழாவிற்கு மாதவியையும் மணிமேகலையையு மழைக்க, அவர்கள் பௌத் தசங்கஞ் சார்ந்ததால் தாங்கள் வர இயலாமையைச் சித்திராபதிக்குக் கூறும்படி சொல்ல, அவள் செல்லுங்கால்,

"அரும்பெறல் மாமணி,
ஓங்குதிரைப் பெருங்கடல் வீழ்த்தோர் போன்று"

என அவர்க ளிருவரும் வாராமையால் வருத்தமுற்ற வயந்தமாலை, "கிடைத்தற்கரிய இரத்தினத்தைச் சமுத்திரத்திற் போக்கியவர் போன்று சென்றனள்." எனக் கூறுவது மிகப் பொருத்தமானதாகும். அழகிலும், அறிவிலும், தெய்வ வழிபாட்டிலும், துறவிலும், மாதவியையும் மணிமேக லையையும்போற் சிறந்த வேறு மணி கிடைக்குமோ? எனவே, மணியென் றது மிகப் பொருத்தமே. ஒருவன் ஓர் பொருளை ஆறு குளம் குட்டை முதலியவைகளில் போக்குவானானால், அதனை யெவ்வாறாயினுந் தண்ணீர் வற்றிய பிறகாவது பெறலாம். ஆனால், சமுத்திரத்திட்டாற் பெறுவது எவ்வாறு? அதுபோலவே, துறவறநெறி புக்க மாதவியும், மணிமேகலையு மினி இறைவனடி யெய் துவரே யன்றி, இவர்களுக்குக் கிடைப்பரோ?

மணிமேகலையைப் பூப்பறிக்க மாதவி யேவியகாலத்துத் தனியே செல்லுதல் தகுதியன்றெனத் தான் முன்சோலைக்குத் தனியே சென்று, வித்தியாதர னொருவனா லெடுத்துச் செல்லப்பெற்ற கதையைக் கூறி, "மணிப்பூங் கொம்பர் மணிமே கலைதான், தனித்தலர் கொய்யுந் தகைமைய ளல்லள்" எனத் தானும் போவதாகக் கூறி, சுதமதியும் மணிமேகலையும் உவவனஞ் சென்றார்களெனக் கூறப்பட்டுள்ளது. ஆனால், இக்காலத்தோ தனியே ஒரு பெண் அயல்நாடுகளுக்குஞ் செல்லலாம்: நாணம், மடம், அச் சம், பயிர்ப்பு இன்றி எந்த ஆடவனிடத்திலுந் தாராளமாகப் பேசலாம். என்னே! என்னே!

"பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்

பற்றின் வருவது முன்னது, பின்னது
அற்றே றுறுவது"

என்பது வேத வுடன்பாடுடையார் யாவர்க்கு மொப்ப முடிந்ததாகும். ஆசை பிறப்புண்டாக்குந் தன்மையுடையது. அதனை, இம் மணிமேகலையுட் கூறுகின்ற ஆபுத்திரன் சரிதத்தா லறியலாம். இதனையே, "மாிக்கும்போ துன்னும் வடிவினை யாவி, பரிக்கு நினைவு பரித்து" என்றார் பிறரும். "அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந், தவாஅப் பிறப்பீனும் வித்து" என்றார் தேவரும்.

எட்டிகுமரனால் மணிமேகலை உவவனஞ் சென்ற தறிந்து, எவ்வாறாயினும் மணிமேகலையை என் தேரிலேற்றி வருவேனெனச் சொல்லிய உதயகுமரன் வருந் தேரொலிக்குப் பயந்து மணிமேகலை பளிக்கறை புகுந்த பின், சோலையில் தனியளாய் நின்ற சுதமதியினிடம் மணிமேகலையி னுள்ளக்குறிப்பை வினவிய உதயகுமரனுக்குச் சுதமதி, சரீரத்தைப்பற்றிக் கூறியதாகச் சொல்லும் அடிகள் மிகுந்த காமவிகார முடையா னொருவனையும் நல்வழிப்படுத்தும். அவையாவன:—

"வினையின் வந்தது வினைக்குவிளை வாயது
புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது
மூத்துவிளி வுடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை
யவலக் கவலை கையா றழுங்க
றவலா வுள்ளந் தன்பா லுடையது
மக்கள் யாக்கை"

"மனிதசரீரம், முற்பிறப்பிற்செய்த வினைகளின்பயனாக வருவது. அவ்வாறு வினையின் பயனாக வந்ததும், மேலும் மேலும் வினைப்பயிர் விளையும் நிலமாக வுள்ளது. சந்தனம் மலர் முதலிய சுகந்தப்பொருள்க ளணிவதை நீக்கினாற் புலால் நாறுவது. முதிர்ந்து இறத்தலையுடையது. கொடிய நோய்களுக் கிருப்பிடமாக வுள்ளது. ஆசையினது வீடு. குற்றத்தைத் தன்னுட் கொண்ட பாத்திரம். வருத்தந் தோன்ற கிற்றல், அவ்வருத்தத்தால் யாது செய்வேனென் றேங்குதல், அதனால் மூர்ச்சித்தல், பின்பு வாய்விட் டழுதல் முதலிய நீங்காத நெஞ்சைக்கொண்டது." என்பது இதன் பொருளாகும். இவ்வாறு சரீரத்திலுள்ள குற்றங்களை யெல்லாம் கூறி, இச் சரீரத்தைப் புறமறியாகப் பார்ப்பாயாக வெனப் புகன்று, அவனுள்ளத்தைத் திருப்ப முயல்கின்றாள். இதனாலன்றோ, அருணகிரிநாதரும், "ஊனே றெலும்பு சீசீ மலங்க ளோடே நரம்பு கசுமாலம், ஊனேயடைந்து மாசா னமண்டு ஆனே டுழன்ற கடைநாயேன்" எனக் கூறியுள்ளார். இவ் வடிகளுள்ளே, கோபத்திற்குப் புற்றடங்கரவை உவமித்தது மிகப் பொருத்தமானதாகும். ஒருவனிடத்துக் கோபம் எப்பொழுதுமே புறத்தி லிருப்பதில்லை. ஆனால், அகத்திலிருந்து குபீர் என்று கிளம்பும். புற்றிலிருந்து எவ்வாறு பாம்பு குபீரென்று கிளம்பிக் கடிக்குமோ, அதுபோலவே கோபமும் வெளிவரும்.



இனி, பளிக்கு மண்டபத்துள் மணிமேகலையைக் கண்ட உதயகுமரன் சுதமதியை நோக்கி, மணிமேகலை எத்திறத்தா ளெனக் கேட்குங்கால், சுதமதி,

"நின், முருகச் செவ்வி முகந்துதன் கண்ணாற்
பருகா ளாயிற் பைந்தொடி நங்கை
ஊழ்தரு தவத்தள் சாப சரத்தி
காமற் கடந்த வாய்மையள்"

"உன் இளமையி னழகை முகந்து தன் கண்ணா லுண்ணாள்; ஊழ்வினை தந்த தவத்தை யுடையாள்; சாபமென்னு மம்பினையுடையாள்; மன்மதனை வென்ற தன்மையை யுடையாள்" என மணிமேகலையின் றிறத்தைக் கூறுவது எவ்வளவு சிறப்புடையதாயிருக்கின்றது. மணிமேகலையை விரும்பி வந்த உதயகுமரனை, அவள்பாலுள்ள ஆசையை நீக்கித் திருப்பிச் செல்ல வேண்டுபவள், முன் சரீரத்தி னிழிவைக் கூறியும், பளிக்குமண்டபத்துள் மணிமேகலையைக் கண்டு, அம் மண்டபத்துட் செல்ல நினைத்து, வழிதெரியாது மண்டபத்தைக் கையாற் றடவிக்கொண்டு செல்லும் உதயகுமரன் ஆசையை நீக்குதற்கு மேலும் அவளது தன்மையை எவ்வாறு கூறுகின்றனள்? "இருவரு மொருமித்த காதலுடையரா யிருப்பினன்றோ வாழ்க்கையி லின்பமுண்டாகும். நீ காதலுடையவனாயிருப்பினும் அவள் மன்மதனை வென்றவள். உன்னை விரும்பமாட்டாள். எதுகாரணத்தாலோ வெனின், ஊழ்தரு தவத்தினை யுடையளா யிருத்தலின். இவ்வாறுள்ள அவளை, நீ பலவந்தப்படுத்த வெண்ணுவாயானால், அவளிடம் ஓர் அம்பு இருக்கிறது. உங்கள் வில்லிற் பூட்டப்படுகின்ற அம்பு உயிரை மட்டுந்தான் கொல்லும். ஆனால், அவளது அம்பு எந்தக் காரியத்தையுஞ் செய்யும். அது நல்ல காரியமாயிருந்தாலுஞ்சரி; அன்றித் தீய காரியமாயிருந்தாலுஞ்சரி. அவ் வம்பிற்குச் சாபமெனப் பெயர். நீ மாறுபட்டுச் செல்வாயெனி லுன்னை யவள் சபிப்பள்." எனப் பின்னையும் அவன் அவளை விரும்பாதவாறு கூறுவது மிக அழகா யமைந்துளது. பின்னும், உதயகுமரன் சுதமதியினிடத்து நினது வரலாற்றைக் கூறுவாயாக வென, சுதமதி தனது வரலாறு கூறுவதற்குமுன் அவனை வாழ்த்துகிறாள். எவ்வாறு?

"வார்கழல் வேந்தே வாழ்கநின் கண்ணி
தீநெறிப் படரா நெஞ்சினை யாகுமதி"

என்பதாக: இப்போது தவத்தினை யுடைய மணிமேகலையை யடையவேண்டுமென்ற தீநெறிப்பட்ட நெஞ்சினை யுடையானா யிருக்கின்றனை யன்றோ? ஆதலின், தீநெறிப் படரா நெஞ்சினை யாகுமதி யென வாழ்த்துகின்றாள். "காதிவிளை யாடியிரு கைவீசி வந்தாலுந், தாதிமனம் நீர்க்குடத்தே தான்" அல்லவா? ஆகையினால், வற்புறுத்துகின்றாள். வரலாறு கூறுங்கால், பசுப்பாய்ந்த தந்தையையும் தன்னையும் சமண முனிவர்கள் துரத்த, வீதியிற் சென்ற பௌத்த சந்நியாசி தங்களை யாதரித்தான்; அவன் இன்ன தன்மையனாக விருந்தா னென்பதனைக் கூறும்பொழுது, ஓர் பௌத்த சந்நியாசியின் வடிவத்தை அப்படியே எழுத்துமூலமாகப் படம்பிடித்துக் காட்டுகிறார். இதனை ஆங்கிலத்திற் (pen picture) பென்பிக்ச்சர் எனக் கூறுவர். அதாவது:—

"மங்குறேய் மாட மனைதொறும் புகூஉ
மங்கையிற் கொண்ட பாத்திர முடையோன்
கதிர்சுடு மமயத்துப் பனிமதி முகத்தோன்
பொன்னிற் றிகழும் பொலம்பூ வாடையன்"

என்பதாம். இதில், வருத்தமுற்று வாடியபொழுது ஆதரித்த தன்மைக்குச் சூரியன் சுடுங்காலத்து, அது நீங்கித் தண்மதி தோன்றிய தென்னு முகத்தையுடையானென்பது எவ்வளவு சிறப்புடைத்து? பௌத்த சமயத்திற்கே முக்கியமான கொள்கை, எவ்வுயிரிடத்தும் அன்புடையனு யிருத்தலே. இதனையே,

"அருளு மன்பு மாருயி ரோம்பு
மொருபெரும் பூட்கையு மொழியா நோன்பிற்
பகவன்"

எனக் கூறியுள்ளார். புத்ததேவனைத் தனக்கென வாழாப் பிறர்க் குரியாளனென இரக்கம் பொங்கிவழியுந் தன்மையை நன்கு விளக்குகின்றார்.

மணிமேகலாதெய்வம், சக்கரவாளக்கோட்ட வரலாறு கூறுங்கால், இயமனுடைய தன்மையை,

"தவத்துறை மாக்கண் மிகப்பெருஞ் செல்வ
ரீற்றிளம் பெண்டி ராற்றாப் பாலகர்
முதியோ ரென்னு ளிளையோ ரென்னான்
கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்ப"

என, "முற்றி யிருந்த கனியொழியத் தீவளியா, னற்கா யுதிர்தலு முண்டு" என்னுங் கருத்தை விரித்துக் கூறுகின்றார். இவ்வாறு கூறுங்கால் அதனுள் ஒரு நீதியையும் புகுத்தியுள்ளார். அஃதாவது:—

"அழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டும்
கழிபெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து
மிக்க நல்லறம் விரும்பாது வாழு
மக்களிற் சிறந்த மடவோ ருண்டோ"

இயமன் கொன்று குவிக்கின்றான். சுடலை நெருப்பாகிய வாயினால் தின்றுகொண்டிருக்கின்றது. இதனை யாவரும் பார்த்துக்கொண்டுதா னிருக்கின்றார்கள். இருந்தும், மிகுந்த செல்வமென்னுங் கள்ளை யுண்டு, தருமம் விரும்பாது வாழுகின்றார்கள். இவர்கள் ஒருவகையிற் சிறந்தவர்களே. எவ் வகையில்? மடமையில். இப்பகுதி,

"முடிசார்ந்த மன்னரு மற்றுமுள் ளோரு முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவ துங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லாற்பொன்னி னம்பலவ
னடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேயறி வாரிலையே"

என்ற பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாட்டை யொத்த கருத்துடைய தாகக்காணப்பெறுவது உய்த்துணரத் தக்கதாம்.

(தொடரும்.)

உ

# பெரியார் அருட்செயலும் : : காந்தியார் மருட்செயலும்.

உலகன்பட்டி, சித்தாந்தசைவ நிலயம்
உயர்திரு இலக்குமண சுவாமி அவர்கள்.

சிவனெனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி எம்மான் அருள்பெற்றோர் செய்யும் செயல் அருட்செயலெனவும், அவ்வருள் பெறுதற்குத் தடையாயுள்ள மல மயக்குடையார் செய்யும் செயல் மருட்செயலெனவும் பெயர்பெறும். சாகரஞ் சூழ்ந்த மாபெரும் புவியில் எட்டுவான் குணத்து ஈசனருள் பெற்றோரே பெரியாரெனவும், பெருமக்களெனவும், மகான்களெனவும், மகாத்மாக்களெனவும், சிவஞானிகளெனவும் கூறப்பெறுவர். மும்மலப் பகையை வென்ற அப் பெரியாரே, மலப்பிணிப்புண்டுழலும் மக்களுக்கு இறைவன் பெருமையையும், இறைவனை வழிபட்டு அருள்பெறும் நெறியையும் எடுத்துக் கூறி, மக்களை அந் நெறியில் ஒழுகச் செய்து, நாட்டுக்கு நன்மை புரிவோராவர். அப் பெரியார் செயலனைத்தும் இக்காலத்துப் போலிப் பெரியார் மருட்செயல் போல் மக்களுக்கு ஓர் அட்டுணையும் துன்பம் பயவாமல் இன்பம் அளிப்பனவேயாம். அருளுடையாருக்கு அரசரும் வணக்கம் செய்து குற்றேவல் புரிவர். அருட்பேறுடையார் தாம் எண்ணிய கருமத்தை எண்ணியவாறே செய்து முடிப்பர். அருளுடையாரையே அறந் திறம்பா தொழுகும் உத்தமர் போற்றுவர். தாமார்க்கும் குடியல்லாச் சங்கரன் அருள் பெற்றோரே, நாமார்க்கும் குடியல்லோம் எனவும், நமனை அஞ்சோம் எனவும், நரகத்தில் இடர்ப்படோம் எனவும், நடலையில்லோம் எனவும் ஏமாப்போம் எனவும், பிணியறியோம் எனவும், பணிவோம் அல்லோம் எனவும், இன்பமே எந்நாளும் துன்பமில்லை எனவும் கூறும் தகுதி உடையவராவர்.

இத்தகைய பெரியார்களில் சில பெரியார் செய்த அருட்செயல்களுள் சிலவற்றை ஈண்டுக் கூறுகின்றேன். சீகாழியில் திருவவதாரஞ்செய்து, மூன்று வயதில் உலகீன்ற அம்மையார் பொன் வள்ளத்திற் கறந் தளித்த ஞானமயமாயுள்ள திருமுலைப்பாலை உண்டு, கலைகளனைத்தையும் ஓதாதுணர்ந்து, அபரஞான பரஞானச் செல்வராகி, வடமொழி வேதத்திலுள்ள சக்கையை ஒழித்துச்சாரத்தைக் கவர்ந்து, தென்மொழியில் தேவாரம் எனப் பெயர்தந்து நம்மனோர் உய்ய இன்ப அமுதமழை பொழிந்த நமது திருஞான

சம்பந்த மூர்த்திகள், பாண்டிநாடு முற்றும் சமண இருளால் மூடப்பட்டிருந்தஞான்று, மங்கையர்க்கரசியாரும், குலச்சிறை நாயனாரும் வேண்டிக்கொண்டதற் கிசைந்து மதுரைக்குச் சென்று தாம் இருந்த மடத்தில் சமணர்கள் இட்ட நெருப்பைச் சுரநோயாய்ச் சென்று நின்றசீர்நெடுமாறர் என்கின்ற கூன்பாண்டியரைப்பற்றி வெதுப்புமாறு செய்து, பின்னர் அப் பாண்டியர் பக்கலில் தாம் கருணைகூர்ந்து எழுந்தருளியிருந்து திருவெண்ணீறிட்டு அந் நோயை ஒழியச்செய்தும், திருநெறித்தமிழ்மறை எழுதிய திருவேட்டை அனலிலிட்டு வேவாதிருக்குமாறும், புனலிலிட்டு எதிரேறிச் செல்லுமாறும் செய்தும், சமணர்களை வென்று தம் திருவடிக்கண் வீழ்ந்து வணங்கிய பாண்டியருக்குத் திருவெண்ணீறளித்துச் சைவராகச் செய்து, அன்னார் உடற்கூனையும், உயிர்க் கூனையும் நீக்கியருளி, பாண்டியநாடெங்கணும் சிவமணம் கமழுமாறும், திருநீற்றொளி துளும்புமாறும் செய்தனர். நமது பெருமான் செய்த செயற்கரிய இவ் வருட் செயல்களாற், சிவாலயத்துக்கும் சிவனடியாருக்கும் தீங்கு புரிந்து வந்த கொடிய சமணப் பாதகர் துன்புற்றனரேயன்றி, நாட்டுமக்கள் இம்மியளவும் துன்புறவில்லை என்பதும், இன்ப வாழ்வையே பெற்றிருந்தனர் என்பதும் ஈண்டு உற்று நோக்கற்பாலன.

திருவாமூரிலே திருவவதாரஞ் செய்து, திருவதிகை வீரட்டானத்தில் இறைவன் அருள் பெற்றுத் திகழ்ந்த நமது திருநாவுக்கரசு மூர்த்திகள், சமணக் கொடியாரால் அனல் கொளுவிய நீற்றறையில் இடப்பட்டு ஏழுநாளிருந்து சிறிதும் ஊறின்றி வெளிவந்தும், அன்னார் விடங் கலந்து கொடுத்த பாலடிசிலை அச்சமின்றி அமுதையொப்ப உண்டு தீங்கின்றி யிருந்தும், அக் கொடியார் கொலை புரிய ஏவிய யானையை வணங்கச் செய்தும், அப் பாவிகள் தம் முடலோடு பிணித்துக் கடலிலிட்ட கல்லை மிதக்கச் செய்தும், அச் சமணப் பாதகரை வென்று, அப் பாதகரின் சமயச் சார்பை ஒழித்துத் தம் திருவடிக்கண் சரணம் புகுந்த பல்லவ ராசனை சைவனாக்கி அடிமைகொண்டு, இறைவன் றிருவருட் டிறத்தைத் தமிழ்நாடெங்கும் பிறங்க வைத்தனர். இப் பெரியார் செய்த செயற்கரும் செயல்களும் நாட்டவர்க்கு நலத்தையே விளைத்தன.

திருநாவலூரிலே திருவவதாரஞ் செய்து, திருவெண்ணெய் நல்லூர் இறைவரால் தடுத்தாட்கொண்டு திருவருள் கொடுக்கப்பெற்ற நமது சுந்தரமூர்த்திகள், தம்பிரான் தோழராகி பல அற்புதச் செயல்கள் செய்து, திருப்பரங்குன்றில் சேரர், சோழர், பாண்டியர் என்கின்ற மூவேந்தரும் தமது திருவடியை வணங்க அன்னாருக் கருள் செய்து, பின் சேரமன்னர் வேண்டுதலுக் கிசைந்து அம் மன்னர் நகரத்திற் கெழுந்தருளி அம் மன்னர்பெருமானால் யானைமீதேற்றிக்



கவரி வீசவும், சிம்மாதனத்தில் இருத்தி அருச்சனை புரியவும் பெற்று, திருப்புக்கொளியூரில் முதலையுண்ட மதலையை உயிர்பெற்றுவரச் செய்து நம் நாடெங்கும் சிவப் புகழ் பரவச் செய்தனர்.

திருவாதவூரிலே திருவவதாரஞ் செய்து, திருப்பெருந்துறையில் இறைவன் திருவருள் பெற்ற நமது மணிவாசக மூர்த்திகள், இறைவனையும் சிவகணங்களையும் பரிவீரராகி நரித்திரளைப் பரித்திரளாக்கி நடத்திவரச் செய்தும், வைகை நதியில் நீர்பெருகிக் கரைபுரண்டோடச் செய்தும், இறைவனைக் கூலியாளாகிப் பிரம்படியேற்கச் செய்தும், அரிமர்த்தன பாண்டியனைத் தமக் கடிமை யாக்கி, பின் தில்லையிற் சென்று ஊமைப்பெண்ணைப் பேசவைத்து, புத்தரை வாதில் வென்று, அப் புத்தரோடு ஈழ மன்னனையும் சைவனாக்கி அடிமைகொண்டு, நம் சமயப் பெருமையை நாடெங்கும் நிலைபெறச் செய்தனர்.

கைலாசபுரத்தில் தோன்றி ஐந்து வயதில் திருச்செந்தில் முருகப்பிரான் திருவருள்பெற்ற நமது குமரகுருபர சுவாமிகள், காசிக்குச் சென்று அந் நகரத்தை அரசாண்டிருந்த டில்லிபாட்சா என்னும் மகமதிய அரசன்முன் உயிர்ச் சிம்மத்தின்மேல் ஏறிநின்று வார்த்தையாடியும், நெருப்பிற் காய்ச்சிய இருப்புப் பாளத்தைக் கையில் ஏந்திநின்று நமது சிவப்பரஞ்சுடரின் பெருமையை விளக்கியும், அவ் வரசன் இட்ட புலாலுணவை காய்கனி முதலிய சுத்த உணவாக்கியும், அவ் வரசனைத் தம் வயப்படுத்தி அவ் வரசனுக்கு உயிர்நிலைபோன்றுள்ள பள்ளிவாசலையே இடித்துத் தமக்குத் திருமடம் சமைப்பித்துக் கருப்படி செய்து, நமது சமயப் பெருமையை அங்கண் நிலைபெறச் செய்தனர். இவ்வாறு சுருங்கக் கூறிய செயல்களும் இவைபோன்ற பிற செயல்களுமே பெரியார் அருட்செயல்களாகும்.

இனி, காந்தியின் மருட்செயலைச்சிறிது கூறுகின்றேன். காந்தியென்பவர் மலமயக்கத்தால் நிலையில்லாத உலகத்தை நிலையுடையதெனவும், அழிந்தொழியும் உலகஇன்பத்தை அழிவில்லாததெனவும் கொண்டு, ஆங்கிலேயரை வென்று இந்திய மக்களுக்கு நலம் பல புரிவதாக ஆங்காங்குப்பிரசாரம் செய்தும், செய்வித்தும், மக்களை இராசசட்டத்தைக் கடந்து நடக்குமாறு செய்தனர். அதனால், மக்களுக்கு உண்டாய ஊதியம் சிறைவாசமும், தடியடியுமேயாம். இவ்வாறு மக்களுக்குத் தம்மால் நேர்ந்த இன்னலை நீக்குவித்தற்கும், நலம் புரிதற்கும் உரிய தெய்வத்தன்மை தம்மிடம் ஓர் அணுத்துணையும் இன்மையால், தாமும் சிறைக்களம் புகுந்து வாளாவிழித்துக்கொண்டிருந்தனர். தம்மை நம்பினோர் துன்புறுங்கால் அதனை நீக்க இயலாது விழித்துக் கொண்டிருந்த காங்கிரஸ் வாதிகளுள் ஒருவராய காந்தியை, மேற்காட்டிய பெரியார்களோடொப்பிட்டு

மகாத்துமா என்று கூறுவது, பூனையை யானையோ டொப்பிட்டுக் கூறுவதனோ டொக்குமன்றிப் பிறிதன்று. இராச சட்டமறுப்புச் செய்து மக்களைத் துன்புறுத்தியதோ டமையாமல் இப் பொழுது,

நெடிது பற்பகல் செல்லினும் நிரம்புவ தொன்றை
இடைவி டாமலே முயன்றுபெற் றிடுகின்ற தியற்கை
உடல்வ ருந்தியும் தங்களால் முடிவுறா தொன்றை
முடியு மீதெனக் கொள்ளுதல் கயவர்தம் முறையே.

என்ற நமது கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் திருவாக்கிற் கிலக்கியமாகி, தம்மால் முடிக்க இயலாத காரியமாயுள்ள தீண்டப்படாதார் ஆலயப் பிரவேசஞ் செய்தல் என்கின்ற தெய்வ சட்ட மறுப்பும் செய்யத் தலைப்பட்டு விட்டார். அரசினர் பாதுகாப்பின்றாயின், இற்றைவரைக்குள், இக் காந்தியின் போதனைக் குட்பட்ட புலைமக்கள், ஆலயங்களுள் நுழைவதற்கு வலிசெய்தும் இருப்பர். அவ்வமயம் உயர்குலத்தவருடன் பெரும்போர் மூண்டிருத்தலும் கூடும். அதனால், இருபாலும் எண்ணிறந்த மக்கள் கொலையுண்டும் இருப்பார். இவ்வாறு மக்களுக்குத் தீங்குபுரிதலையே தமக்குத் தொழிலாகக் கொண்ட காந்தியை, கலகத்தலைவர்—தீமைத் தலைவர் என்று கூறாமல், நாட்டுத்தலைவர் என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்! மக்களுக்கு எவ்வாற்றானும் தீமையணுகாமல் நன்மைபுரிவோரே நாட்டுத்தலைவராவர். காந்தியின் ஒப்பந்தச் செயல்முற்றும், ஒரு குடும்பத்தினர், ஒருகூட்டத்தினர், ஒருகுலத்தினர், ஒருநகரத்தினர், ஒரு நாட்டினர் செய்து கொள்ளும் சாதாரணச் செயல்கள் போன்றனவே அன்றி, தெய்வ அருள்பெற்ற பெரியார் செய்யும் செயற்கரும் செயல்கள் போன்றன அல்ல என்பதை மக்கள் சிறிதும் உணரவில்லை.

இனியேனும், நம் சைவமக்களனைவரும் காந்தி செய்யும் செயல் மக்களுக்குத் தீமையன்றி நன்மைபயவாதெனவும், அவர் சாதாரணமனிதருள் ஒருவரே ஆவர் எனவும், அவரால் ஒரு சிறிய காரியத்தையும் செய்து முடிக்க இயலாதெனவும், அவர் கொள்கையைப் பின்பற்றினால் கேடுவருதல் தப்பாதெனவும் உணர்ந்து,

“வையக மாதர் சுகத்தையும் பொன்னையு மாயைமல
மெய்யையு மெய்யென்று நின்னடி யார்தம் விவேகத்தையும்
ஐயமில் வீட்டையு மெய்ந்நூலையும்பொய்ய தாகவெண்ணும்
பொய்யர்தந் நட்பை விடுவதென் றோபரி பூரணமே.”

என்ற நம் தாயுமானசுவாமிகள் திருவாக்கைச் சிந்தித்து, மருட்செயலுடைய காந்தியின் நட்பை அறவே ஒழித்து, அருட் செயலுடைய நமது பெரியார் திருவடிக்கண்ணும், அப் பெரியாருக்கு அருள்புரிந்த செக்கரஞ்சடையான் திருவடிக்கண்ணும் அன்புடையராய் ஒழுகி இன்புற்று வாழ்வாராக!

---

உ

# மதிப்புரை.

## ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள்.

இவை, கும்பகோணத்துக் கணிமையில், காவிரியாற்றின் வடகரையிலுள்ள தேவாரப்பெற்ற திருத்தலமாகிய கோடீச்சுரமென்னும் கொட்டையூரில், சென்ற நூற்றாண்டில், தஞ்சைமன்னவைப் பெரும் புலவராய் மன்னிய ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகரவர்கள் இயற்றிய “கோடீச்சுரக்கோவை, தஞ்சைப் பெருவுடையாருலா, சரபேந்திர பூபால குறவஞ்சிநாடகம்” என்னும் மூன்று பிரபந்தங்களுமாம். இவற்றை, அப் புலவர்பெருமான் வழித்தோன்றலாய், செந்தமிழ்ச் சுவையுணர் செந்நாப் புலவராய், கவிஞரைப் புரக்கும் கற்பகமாய், திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடாலயக் கருத்தராய் விளங்கும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகளவர்களுடைய பொருளுதவியைக் கொண்டு, மறைத்திருவாளர்: மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் பல்லாற்றானும் ஆய்ந்து பிழையறப் பரிசோதித்து, நூலாசிரியர் வரலாறும், கோடீச்சுரக்கோவைக்குத் தனியே நான்முகம்—பொருட் டொடர்பு—ஆராய்ச்சியும், மற்றிரண்டுக்கும் ஆராய்ச்சியுடன் கூடிய நான்முகங்களும், தஞ்சைச் சரபோஜி மன்னர் சரித்திரமும், குறிப்புரைகளும் ஆகிய பலவும் தாம் நூதனமாக எழுதி இவற்றுக்கு அங்கமாக அமைத்து, உயர்ந்த கடிதத்திற் சிறந்த முறையி லச்சிட்டு, கண்கவர் வனப்புறு கட்டடஞ் செய்து ஒரு தொகுதியாக வெளியிட்டுள்ளார்கள். உயர்திரு ஐயரவர்களின் ஆராய்ச்சித் திறனும் பதிப்பின் பாங்கும் நம் தமிழுலகம் நன்கறிந்த தொன்றாகலின், அவை குறித்து விரித்தெழுதல் மிகையே. இப் பிரபந்தங்களுட் கோடீச்சுரக்கோவையானது, ‘கோவை நூல்கள் பலவற்றின் சாரமெல்லாந் தெள்ளத் தெளிய வடித்துத் திரட்டிய புத்தமிர் தொத்து முத்தமிழ்ப் புலவர்க்குப் பெரு விருந்தெனப் பிறங்கும் பெற்றிமை யுடையதாகும்.’ எனப் பெரியோர் புகழ்ந்து பேசுவர். இந் நூற்றுறைகள் ஒவ்வொன்றையும் எழுத்தெழுத்தாய் நுணித் தாராய்ந்து, அதிலதிற் பொதிந்துள்ள சொற்பொருட்சுவை கற்பனைத்திறன் ஆதிய பல நயங்களையும், ஐயரவர்கள் தமது குறிப்புரையிற் கண்ணாடி போல் விளக்கிக் காட்டியுள்ளார்கள். இந் நூலின் பொருட்டொடர்பு ஆதியவற்றைக்கொண்டு, கோவைப் பிரபந்த இயலுணரா இளைஞரும் இந் நூற்பொருளை யெளிதி லறிந்துகொள்வதுடன், மற்றைய கோவைகளையும் கூர்ந்தறியும் மதிநுட்பம் வாய்க்கப்பெறுபவராவார்கள். குடத்திலிட்ட விளக்குப்போலிருந்த இப்பிரபந்தங்களைக் குன்றிலிட்ட விளக்கம்போல் தகுமுரைகாரரைக்கொண்டு தமிழுல

கிற்குப் பயன்படுத்தி, தமது குலக் கொழுந்தும் தவக் கொழுந்தும் ஆகிய சிவக்கொழுந்து தேசிக ரவர்களின் புகழைப் பரவச் செய்த ஸ்ரீ சுவாமிநாத சுவாமிகளவர்கள், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்—ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்—ஸ்ரீ சிவஞான சுவாமிகள் ஆகிய செந்தமிழ்ச் சான்றோர்க ளாக்கிய பிரபந்தங்கள் பலவற்றையும், உயர்திரு ஐயரவர்களைக்கொண்டு இம் முறையே அச்சிடுவித்து வெளியிடுவார்களாயின், அவை தமிழ் மொழியைக் கற்பார்க்கும் கற்றவர்க்கும் உற்ற துணையா யுதவும் உயர்வுடையன வாகும். முத்தமிழ்க் கிலக்கியமாய் விளங்கும் இம் முப்பிரபந்தங்களின் அருமையும் பெருமையும், ஐயரவர்கள் பதிப்பின் திறமையும், அறிஞர்கண் மதிப்பிற் கடங்கா மாண்புடையவா மெனின், எம்மனோர் மதிப்பிற் கெளிமையுடையவாமோ? இன்னும், இத்தகைய நூல்கள் பலப்பல வெளியிடுதற்கு உடலுறுதியையும், நெடிய வாணாளையும் உயர்திரு ஐயரவர்கட்கு உதவியருள, இறைவன் திருவடிக் கமலங்களை யிடையறாது இறைஞ்சுகின்றோம். தமிழ்ச்சுவை நுகர்வார் யாவரும் இப் புத்தகத்தை வாங்கிப் படித்து இன்புறுவார்களாக! இதன் விலை ரூ. 2—8—0.

## தமிழ்க் கடல்.

பூமி, வானம், தாவரம், ரஸாயனம், பௌதிகம் ஆதிய சாஸ்திரக் கருத்துக்களும், இக்காலத்திற் பரவிவரும் வானவூர்தி, மின்னொளி, கம்பியில்லாத்தந்தி, ஒலி பரப்புங் கருவி முதலிய புதிய செய்திகளும் தன்னுட்கொண்டு, சென்னையிலிருந்து வெளிவரும் செந்தமிழ்த் திங்கள் வெளியீடு. இதன் ஆசிரியர் திரு. கா. நமச்சிவாய முதலியார். தமிழ்நாட்டு மாணவர்கட்கோர் நல் லாசிரியராய் மிளிரும் நலனுடைப் பெரியா ரிவரே. இவரது உரைநடை யாவர்க்கும் எளிதிற் பொருளுணர்த்தும் இயல்புடையதாகும் என்பது தமிழ்நாடு நன்கறிந்ததே. இக்காலத்துத் தமிழ் மாணவர்க்கு இவ் வெளியீடு இன்றியமையாக் கரபூடணமாய் இலங்கத்தக்க எழிலுடையதாகும். இதன் முதற் கடலில் முதலலை நம்பாங்கர் வீசப்பெற்று விம்மித மெய்தினோம். இதனைப் பெற விரும்புவோர் "தமிழ்க்கடல் ஆபீஸ், சாந்தோம், மயிலாப்பூர், சென்னை." என்ற விலாசத்திற் கெழுதிக்கொள்ளலாம்.

## ஸ்ரீமுக வருஷ வாக்கிய பஞ்சாங்கங்கள்.

1. யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சமஸ்கிருத திராவிட பண்டிதரும் சோதிட கணித சித்தாந்தியும் வித்தியாவிருத்தி தருமகருத்தருமாகிய பிரமஸ்ரீ ச. சுப்பிரமணிய சாஸ்திரியார் அநுமதிப்படி அவரது சகோதரரின் புத்திரராகிய பிரமஸ்ரீ சோ. வைத்தியநாத சாஸ்திரியா ரவர்களாற் கணிக்கப்பெற்றது. இதில் விரதம், சிராத்த திதி, முகூர்த்தம், திதி நக்ஷத்திரம் கிரகசாரம் முதலிய பலவும் சாஸ்திர விதிப்படி யாராய்ந்து நிர்ணயிக்கப்பெற்றுள்ளன. பகல் இரவு நாழிகை அறியும் வகையும், மற்றும் சோதிடாங்கங்கள் பலவும் கொண்டு நன்முறையி லச்சிடப்பெற்றிருக்கின்றது. இதன் விலை அணா 0—4—0. விலாசம்:— சோ. வைத்தியநாத சாஸ்திரிகள், சரஸ்வதி யந்திரசாலை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம்.



2. யாழ்ப்பாணம், கொக்குவில், பஞ்சாங்க கணித பரம்பரை பிரமஸ்ரீ இரகுநாதையரவர்கள் தத்தபுத்திரர் சிவராமலிங் கையராலும், பௌத்திரர் ச. பஞ்சாக்ஷர ஐயராலும் கணிக்கப்பெற்றது. இதுவும் சோதிடாங்கங்கள் பலவும் விளக்கமாகக் கொண்டு, சோதிடர்களுக்கு மிகவும் உபயோகம் உடையதாகக் காணப்படுகிறது. தொகுத்துக் கூறின் இதன் உதவிகொண்டே சோதிட நூற் பயிற்சியில்லாதவரும், நன்முகூர்த்தம் முதலிய கால நிர்ணயம் பலவும் தாமே யறிந்துகொள்ளும் தகையுடைய ராவார்களென்பது மிகை யாகாது. இதன் விலை அணா 0—4—0. விலாசம்:— இ. சி. இரகுநாதையர், சோதிட பரிபாலன மடம், கொக்குவில், யாழ்ப்பாணம்.

[மேற்காட்டிய பிரபந்தங்கள் முதலியவற்றின் பிரதிகள் ஒவ்வொன்று எமக்கு இலவசமாக அனுப்பிய ஆசிரியர்கட்கு எமது நன்றி யென்றும் உரியதாகுக. ப—ர்.]

---

# ஆடு கோழிகளைத் தாய் அலறப் பிள்ளை அலறப் பலியிடாதீர்கள்.

**பலியாகிய கொலைப்பாவத்தை எத்தெய்வமும் விரும்பவே விரும்பாது.**

**பலி தெய்வத் திருவருள் நெறிக்கு மாறானது.**

பூமி, சூரியன், சந்திரன், வாயு, வருணன் முதலான கண்கண்ட தெய்வங்கள் ஆடு கோழிகளை வெறுத்துத் தங்கள் கடமைகளை அவைகளுக்குப் புரியாமல் விலக்குகின்றனவா? இல்லை! இல்லை!! இல்லை!!! ஈ எறும்பு முதலாகிய எண்பத்துநான்கு லக்ஷபேத உயிர்களையுஞ் சமமாகவே பாவித்துத் தங்கள் தொழில்களால் அவைகளைக் காத்துவருகின்றன. இவ்வாறே தெய்வமென்று போற்றப்படுபவைகள் எல்லா உயிரையுஞ் சமமாகவே காத்துவரும் என்றறியுங்கள்.

கண்கண்ட தெய்வங்கள் கருணையுடன் காத்துவர
காணாத தெய்வங்கள் கழுத்தறுக்கச் சொல்லுமா?

என்ற பழமொழியை மனதில் பதியவைத்துக்கொள்ளுங்கள்.

காட்டில் வாழ்ந்த நாகரீகமற்ற முரட்டுஜனங்களின் மூடபக்தியான பலியிடும் பாழ்வழக்கம் நாட்டில் கலந்துவிட்டது.

திரு. காந்தியும் அவர் மனைவியாரும் ஜலால்பூரில் துப்ளாஸ் என்றஜாதியார் காளிக்குப் பலியிடக் கொண்டுவந்த ஆடுகோழிகளைப் பலியிடாமல் விட்டுவிடும்படி வேண்டி அவைகளை மீட்டார்கள்.

திருவாலங்காடு, தாராசுரம், கூப்பாச்சிப் பாளையம், வரன்பாளையம், காவலி, திருக்கழுக்குன்றம், ஜலால்பூர், சிதம்பரம், குடிவாடா முதலிய பல விடங்களில் பலியிடுவது அடியோடு நின்றுவிட்டது. பலரும் பாற்பொங்கலைபடைத்துவருகிறார்கள். அவ்வாறேநீங்களும் ஆடு கோழிகளைப் பலியிடாமல் சன்மார்க்கர்களாகிப் பாற்பொங்கல் படைத்துத் தற்கால நாகரீக உலகத்தில் கலந்து ஊனமில்லா புத்ர பௌத்ராதிகளைப் பெற்று சம்பத்துடன் வாழ்வீர்களாக.

தெய்வத்தால் நோய்க ளுண்டாகின்றன வென்பது பொய். தெய்வமாவது எவ்வுயிர்க்குந் தாய்தந்தை போன்றது. தெய்வம் தன் மக்களாகிய உயிர்களுக்கு யாதொரு துன்பத்தையுஞ் செய்யாது. நோய்கள் உடல் கோளாறுகளாலும் சுகாதாரக் கேட்டாலும், ஊழ்வினையின் வலியாலுமே வருகின்றன.

தெய்வம் உயிர்ப்பலி கேட்பது என்பதும் பொய். பலிகொடுத்து உயிரோம்புதல் உண்மையாயின், இதுவரை மாண்டு மன்றுன சக்கரவர்த்திகளும் மன்னவர்களும், தலைவெட்டித் தம்பிரான்களாகிய பூசாரிகளும் அம்மனுக்கு உயிர்ப்பலி கொடுத்துவிட்டு ஏகபோகமாய் சிரஞ்சீவிகளாய் வாழ்ந்திருப்பார்கள். உயிர் வாழ்ந்திருப்பவர் எவரையுங் கண்டதுமில்லை. கேட்டதுமில்லை.

அம்மன் பலியை விரும்புகிறாளென்பதும் பொய்யே! அம்மன் முன் ஆடு கோழிகளை உயிருடன் நிறுத்தி வைத்திருக்கின்றோம். இவைகளின் உயிரை வாங்கிக்கொண்டு உடலைப் பிரேதமாகக் கீழே தள்ளு என்று கேட்டால், அது அவ்வாறு தள்ளுமா? இதனால் அம்மன் உயிர்ப்பலி விரும்பவில்லை என்பது விளங்கும். ஆட்டை வெட்டுவதற்கு முன் அதன்மேல் ஜலத்தைக் கொட்டுகிறார்கள். அது தன் உடலைக் குலுக்குகின்றது. பூசாரிகள் இதை அம்மன் உத்திரவுகொடுத்ததாகச் சொல்லி ஆட்டை வெட்டும்படி கட்டளையிடுகிறார்கள். இது முற்றும் எமாற்றமான செய்கை. எந்தப் பிராணியின்மேல் ஜலத்தைக் கொட்டினாலும் உடலைக் குலுக்குந்தானே.

ஆவேச பாடுகிறவர்களும் பொய்யர்களே! நம் கையில் ஏதாகிலும் ஒரு வஸ்துவை மறைத்துக்கொண்டு இஃது என்னவென்று கேட்டால், அவர்கள் அதை உள்ளவாறு சொல்ல முடியாமல், "என்னைச் சோதிக்கிறாயா?" என்று மிரட்டிவிட்டு, மலையேறி விட்டதென்று கீழே விழுவார்கள். இவர்களே ஆடு கோழிகளைக் கேட்பவர்கள். இவர்களையும் நம்பாதீர்கள்.

இத்தகைய பொய்மயக்கில் சிக்கிக் கொலைப்பாதக ராகாதீர்கள். பலி யிடாதீர்கள். பாற்பொங்கல் இடுங்கள். பத்து ஏழைகளுக்குப் பசிதீர அன்ன மிடுங்கள். புண்ணியமும் புகழும் உண்டு.

தென்னிந்திய ஜீவரக்ஷா பிரசாரக சபையார்,
சென்னை.

---



233. விற்றிகழ் வாணுதலி மென்சா யலுமொழியும்
சிற்றிடைதள் ளாடுந் திருநடையும்—கற்றறிய
234. வன்னக் கலாப மயிலும் வரிக்குயிலும்
அன்னக் குழாமு மருகுவரப்—பன்னும்
235. இனிய நரம்புளரு மின்னிசையா ழென்னப்
பனிமலர் வண்டுகள்பண் பாடக்—கனியுதவு
236. கொம்பர் மிசையிருந்த கொண்மூ முழவதிர
அம்பொதியத் தென்கா லசைத்ததளிர்—இம்பருற
237. வாவெனல் போலசைய மாதவிப் பந்தரின்கீழ்
ஏவனைய கண்ணா ளினிதிருந்து—தேவர்
238. பெருமானைச் சங்கரனைப் பெம்மானைப் பங்கில்
ஒருமானை வைத்தானை யுன்னித்—திருமானை
239. அன்னாள் சுரும்பை யழைத்திதழி வாங்கிவரச்
சொன்னாள் விடுத்தாள் துயருற்றாள்—பொன்னனையார்
240. ஆற்றவு மாற்றா தயர்ந்துருகு மவ்வளவிற்
கூற்றமு மஞ்சுங் குரைகழலான்—மாற்றலர்
241. முப்புரமு நீற முகிழ்த்த திருநகையான்
எப்புவியும் போற்றமறு கெய்தலும்—துப்பிதழி
242. சென்று தொழுதாள் செழுமதித் தீப்பொரு
தன்று நதியோ டணிந்ததுவும்—என்றுமொரு

---

233. வில் திகழ். நுதலியினது.

233-4. சாயல் முதலியவற்றிற்கு மயில் முதலியவை நிரனிறையாகக் கொள்ளப்படுவன.

236. கொண்மூ - மேகம். முழவு - மத்தளம்; "விண்ணதி ரிமிழிசை கடுப்பப் பண்ணமைத்துத், திண்வார் விசித்த முழவொடு" (மலைபடு. 2-3), "முகிலிசை யெனமுழா முரன்று விம்மவும்" (சூளா. நகரச்.6.) இம்பர் - இங்கே. 237. மாதவி - குருக்கத்தி. ஏவு - அம்பு.

239. சுரும்பை - வண்டை. தூது விடுத்தாள்.

240. கூற்றமும் அஞ்சுங்குரைகழலான்: "கூற்றங் குமைத்த குரைகழற் கால்" (சிதம்பரச்செய். 8.) மாற்றலர் - பகைவர்.

241. நீற - பொடியாக. மறுகு - வீதியில். துப்பு - பவழம். இதழி - இதழையுடையாள்.

242. மதித்தீ - சந்திரனாகிய நெருப்பை. மதியை நதியோடணிந்தது.

243. பாகம் பகுந்து பரையிருப்ப வேள்பகழிக்
காகம் பகுந்தன் றளித்ததுவும்—வேகவனல்

244. கொட்டுமிள் வாடைக் கொழுந்தையஞ்சிப் பொன்வரையை
விட்டுவெள்ளி வெற்பை விரும்பியதும்—விட்டு

245. மறந்தபடி யோவெளியேன் மற்றவையா லாவி
இறந்து படுவதனை யெண்ணீர்—சிறந்தமழுச்

246. செங்கரனே மிக்க திகம்பரனே சீராசைச்
சங்கரனே யென்று தளர்வுற்றாள்—அங்கரனும்

247. சோதி கடந்த சுடர்மணி மாளிகையின்
வீதி கடந்தகல வேறொருத்தி—காதல்

தெரிவை.

248. உருவழகுஞ் செஞ்சொ லுரையழகும் பெண்மைத்
திருவழகும் பெற்ற தெரிவை—மருவிருந்த

249. மாலிகை வைத்து வகுத்துச் செருகுபசுஞ்
சோலையைவைத் தன்ன சுரிகுழலாள்—ஓலையின்மேல்

250. ஒட்டி யிளைஞ ருயிரனைத்து முண்ணுமல்
வெட்டியுடன் மீளும் விழியினாள்—வட்டநெடும்

251. பார்சொல்லக் கூடாப் பரப்பி னளவையும்
நேர்சொல்லக் கூடா நிதம்பத்தாள்—கார்செல்லும்

252. எட்டு வரையோ டிரண்டுவரை யுண்டெனவார்
கட்ட வமையாக் கனதனத்தாள்—மட்டவிழ்பூங்

243. பகுந்து - பகிர்ந்து. வேள் பகழிக்கு - மன்மத பாணத்திற்கு. அன்று அளித்தது.

244. பொன்வரையை - மேருவை.

245. அவையால் - மதி, வேள்பகழி, வாடையென்பவற்றால்.

246. சீராசை - ஸ்ரீராசை; சங்கரநயினார்கோயில்; 262. அங்கு அரனும்.

247. சோதிகள் தந்த.

249. மாலிகை - மாலை. குழலுக்குச் சோலை உவமை; "அளக மலர்க்கா" (சொக்க. உலா. 321.) ஓலை - காதோலை.

252. எட்டுவரை - குலாசலம் எட்டு. வார் - கச்சு. அமையா - அடங்காத. மட்டு - மணம்.



253. காவிநீ ராடல்வேற் கண்ணி செழுங்கமல
வாவிநீ ராட மனம்வைத்தாள்—ஆவிநீர்

254. அன்னங் கிளிகளொடு மார்கலி யாரமுதம்
என்ன மடவாரு மெய்தினாள்—அன்னமொரு

255. கோடி படிந்தவெனக் கொங்கைக் குடங்கவிழ்த்தி
ஆடிய மாதருட னாடினாள்—சூடகக்கை

256. அள்ளிநறுந் தெண்ணீ ரவர்கருந் தாரைதொறும்
வெள்ளிநெடுந் தாரையென வீசினாள்—கள்ளமுறும்

257. பைங்குவளை மீதிலிரு பங்கயம் பூத்தவெனப்
பொங்கு வளைக்கரத்தாற் பொத்தினாள்—இங்கொழிக

258. என்றார் நகைத்தா ளகைத்த விளநிலவாற்
குன்றா வனசங் குவிதரலும்—துன்று

259. கரையேறிப் பல்கலனுங் கைபுனைந்து மாலை
விரையேறு கூந்தன் மிலைந்து—பரிவாய்க்

260. கனியிருந்த சொல்லியர்க்குக் காமா கமநூல்
இனிதிருந்து கற்பிக்கு மெல்லை—தனிமுழங்கி

தசாங்கம்.

261. விண்ணீர்ப் புயலுறங்கு வெள்ளருவித் தென்வரையும்
தெண்ணீர்ப் பொருனைத் திருநதியும்—பண்ணீர்மை

253. காவி நீர் ஆடல் - கருங்குவளையின் தன்மையை வென்ற; ஆடல் - வெற்றி. வாவி - தடாகம்.

254. அன்னம் - அன்னப் பறவை. ஆர்கலி - கடல்.

255. படிந்த - படிந்தன. கொங்கைக்குடம் - கொங்கையாகிய குடத்தை. குடத்தை மிதப்பாகக் கொண்டு ஆடுதல் மரபு. "தூங்க முலைப்பொற் குடங்கொண்டு தூநீர் நீந்தி விளையாடும்" (மீ. பிள்ளைத். நீராடற். 6); "மானநீ ரணைஞ் சூழ்ந்த மன்னவ னுளத்தி னூடே,...கொங்கைக் குடத்தினு னீந்திப் புக்காள்" நைடதம். அன்னத்தைக். 16.

256. கருந் தாரை - கரிய கண்கள். 257. கண்ணைப்பொத்தினாள்.

258. வனசம் - தாமரை. 259. விரை - வாசனை. 260. நூலை.

261. தென்வரை - பொதியின்மலை; "தென்மலை யிருந்த சீர்சான் முனிவரன்" (பு. வெ. சிறப்புப். 2); "தென்மலைச் சந்தம்" (சிலப். 8:19.) பொருனை - தாம்பிரபன்னிநதி.

262. தந்து கொழிக்கத் தழைக்குந் தமிழ்நாடும்
நந்துதவழ் சீராசை நன்னகரும்—முந்திய

263. பேரா யிரந்துதிப்பப் பெற்ற மறைப்பரியும்
ஈரா யிரங்கோட் டிருங்களிறும்—சேர்தரும்

264. ஆவி யணையபதி னாறு யிரங்கொம்பு
மேவி வளரும் விடைக்கொடியும்—பூவார்

265. திருக்கொன்றைத் தாமமுந் தெய்வ முரசும்
பெருக்குதன தாணையும் பெற்றோன்—செருக்கினால்

266. ஏகவனத் தான்செங்கை யேற்றவனத் தானறியா
நாகவனத் தான்பவனி நண்ணுதலும்—தோகையன்னார்

267. சூழ்ந்துவரச் சென்று தொழுதா டொழுதவுடன்
ஆழ்ந்த விரகத் தழுந்தினாள்—வீழ்ந்தயர

268. ஆர்திகழ் திங்க ளணிந்தா னெடுமகன்றான்
தேரிளந் தென்றற் சிலையானும்—பேரிளம்பெண்

பேரிளம் பெண்.

269. பொன்னிசைய மேவும் புகலியர்கோன் பாட்டிசையும்
இன்னிசையும்யாழினெடுத்திசைப்பாள்—முன்னவன்பொற்

270. றாளாணை யைச்செலுத்துந் தன்மையா ளாண்மையினால்
வேளாணை யைச்செலுத்தா வீறுடையாள்—நாளும்

262. நந்து - சங்கு.

263. களிறு - ஐராவணம்; "நிரை நிரை, ஆயிரம் வகுத்த மாயிரு மருப்பின், வெண்ணிறச் செங்கண் வேழமும்" கோயினான்மணி. 4.

264. ஆவி - உயிரை. பதினாறுயிரங்கொம்பு - நரகாசுரனாற் சிறையில் வைக்கப்பட்ட பதினாறுயிரம் இராச கன்னியரை. செவ்வைச் சூடுவார் பாகவதத்தில், 10-ஆம்கந்தத்தில் நரகாசுரனைக் கொன்ற அத்தியாயத்திற் கண்ணபிரான் பதினாறுயிரம் இராசகன்னியரை மணந்த வரலாறு காணப்படும்.

265. தாமம் - மாலை.

266. ஏக அனத்தான் - ஒற்றை அன்னப்பறவையை யுடைய பிரமன். கை ஏற்ற வல் நத்தான் - திருமால்; நத்து - சங்கம். நாகவனம் - புன்னைவனம்.

267. வீழ்ந்து அயர.

268. ஆர் - ஆத்தி. இளந் தென்றற்றேர் - இளந்தென்றலைத் தேராகவுடைய. சிலையான் - மன்மதன். சிலையான் திங்களணிந்தானெடும் அகன்றான்.

269. புகலியர் கோன் - சம்பந்த மூர்த்தியினது. முன்னவன் - சிவபெருமானது. 270. வீறு - வேறொன்றற் கில்லாத அழகு.



271. உறுதுயி றந்திலவென் றோர்ந்துமை தீட்டா
விறலயில்வே லன்ன விழியாள்—இறையொருபாற்

272. சேர்த்த திருப்பிறைதான் சேர்தற் கரிதென்று
கூர்த்து வனையாக் குழலினாள்—பேர்த்துடைந்தும்

273. ஏங்கியு நொந்துமெம்மை யேந்திய தென்றுதாம்
தாங்கிய வாரந் தருவதற்கும்—ஓங்கலெட்டும்

274. பொற்பழித்து விண்ணிற் பொருப்பின்மை யாற்பிலத்தும்
வெற்புளதோ வென்றாய்ந்து வெல்வதற்கும்—முற்றும்

275. கலைசாய்த்து நேரிட்ட கச்சினையுஞ் சாய்த்துத்
தலைசாய்த்து நோக்குந் தனத்தாள்—மலைசாய்த்து

276. வாரழகு பெற்றமுலை மாமங்கை யர்க்கரசி
பேரழகும் பேரற்பும் பெற்றுளாள்—சேரிளங்கால்

277. சுற்றத் திருந்து சுடரெறிக்கும் வெண்ணிலா
முற்றத் திருந்து முகிழ்நகையாள்—கற்றுணர்ந்து

278. தென்புகலி வேந்து செழியனுடற் கூனிமிர
முன்புகலுஞ் செஞ்சொன் முதுதமிழும்— வன்புலையர்

279. கற்றுணையாச் சேர்த்துக் கடற்படுத்த வஞ்செழுத்து
நற்றுணையென் றோதினோ னற்றமிழும்—முற்றுலகும்

280. தொண்டத் தொகையு மருமறையும் போற்றுதிருத் [றில்
தொண்டத் தொகைவகுத்தோன்சொற்றமிழும்—பண்டுமன்

281. ஆடினோன் பூண்டெழுத வாய்ந்ததுறை நானூறு
பாடினோன் பாடிய பைந்தமிழும்— பாடியிரு

271. மை - அஞ்சனம். இறை - இறைவன்.

272: கூர்த்து - ஆராய்ந்தறிந்து.

273. ஆரம் - முத்தமாலையை. ஓங்கல் - மலை. 274. பொற்பு - அழகு.

276. பேரற்பும் - பெரியஅன்பினையும். இளங்கால் - தென்றல்; "இளங் காற்றூதன்" சிலப். 8:9.

278. புகலிவேந்து - சம்பந்தமூர்த்தி; புகலி - சீகாழி. செழியன் - கூன் பாண்டியன். புலையர் - சமணர்.

279. கல் துணையா - கல்லைத் துணையாக. அஞ்செழுத்து - பஞ்சாட்சரம். ஓதினோன். திருநாவுக்கரசர்.

281. துறை நானூறு - திருச்சிற்றம்பலக் கோவையாரை. பாடினோன் - திருவாதவூரடிகள்.

282. கொங்கை யசையக் குழையசையக் கோலவளை
அங்கைமிசை யம்மானை யாடுமென்றாள்—உங்களிலே
283. ஆட லமையு மமையுமென வோங்குசித்ர
கூடமிசைச் சென்று குலாவினாள்— நீடுபுன்னைக்

சித்திரசாலைக் காட்சி.

284. காவைநே சித்துவந்து கண்ணுதலை யாவுடைய
பாவைபூ சித்த படிபாரீர்— பாவைதனக்
285. கன்று வடிவமிரண் டாக விறைவனென்றாய்
நின்ற கருணை நிலைபாரீர்—சென்றுதொழு
286. இவ்வுலகிற் சங்கபற்ப ரென்னு மரவரசர்க்
கவ்வுருவந் தந்த வருள்பாரீர்—செவ்வேல்
287. அரசன் வழுதிபுரி யாலயமும் வானோர்
பரவு திருநகரும் பாரீர்—விரைகமழும்
288. ஆர வரைமுனிக்கோ ரஞ்செழுத்தி னுண்மைநிலை
தேர வுரைத்த திறம்பாரீர்—சோரவிடைப்

[வடமலைப் பிள்ளையன் பணிகள்]

289. பாகனுமை யாவுடைய பாவைதிருச் சந்நிதியில்
மாகமுயர் பொற்கம்ப மண்டபமும்—தோகையென
290. மாடகநல் யாழிசைத்து மாதர் நடம்புரிய
ஆடகத் தூணிரைத்த வம்பலமும்—சூடுமுடி

283. ஆடல் அமையும் - அம்மானையாடுதல் போதும். சித்ர கூடம் சித்திரங்கள் வரைந்திருக்கும் சாலை; இதனை, "எழுதெழிலம்பலம்", "எழுதுநிலை மண்டபம்" (18:28,19:53) என்பர் பரிபாடலில்.

283-4. புன்னைக் காவை - புன்னைவனத்தை.

284-8. சித்திரசாலையிலுள்ள இத் தலவரலாற்றைப் பற்றிய ஓவிய காட்சி கூறப்படும்.

285. வடிவமிரண்டாக - சங்கர நாராயணராக.

286. அவ்வுருவம் - சங்கரநாராயண வடிவத்தை.

287. அரசனாகியவழுதி - உக்கிரப் பெருவழுதி.

288. ஆரவரை - சந்தனச் சோலைகளையுடைய பொதியின்மலை. முனிக்கு- அகத்திய முனிவருக்கு.

289. மாகம் - ஆகாயம். தோகையென - மயில்போல.

290. ஆடகத்தூண் - பொற்றூண்களை. அம்பலம் - நாடகசாலை.



291. அண்ட ருறையு மகல்வான் முகடுரிஞ்சும்
கொண்டல் படியுநெடுங் கோபுரமும்—எண்டிசைநெல்
292. இட்ட களஞ்சியமு மேற்ற மடைப்பள்ளியும்
வட்டநெடு வான்றோய் மணிமதிலும்—கட்டுகொடிப்
293. பொற்றடந் தேருமந்தப் பொற்றடந்தேர் மண்டபமும்
மற்றை நிருதிதிக்கு மண்டபமும்—முற்றவளம்
294. சேர்ந்தமணி வீதித் திருமடமும் பூந்தேறல்
வார்ந்தொழுகும் பூங்கா வனங்களும்—சார்ந்திலங்கு
295. கூலமணித் தெப்பக் குளமுமணி மண்டபமும்
சீல மறையோர் திருமனையும்—நீலமிடற்
296. றெந்தைவெள்ளிக் குன்றநடந் தேந்தவர ராசைதனில்
வந்ததன்ன வெள்ளிவரை வாகனமும்—புந்திமகிழ்
297. வெண்கதிர் வெள்ளிவெற் பன்னவிடை வாகனமும்
வண்கனகத் திந்திரவி மானமும்—ஒண்சுடர்
298. கொண்டுதிகழ் வெள்ளியங் கோளரி வாகனமும்
மண்டு திறற்பூத வாகனமும்—தொண்டருடன்
299. வானவர் போற்றுமொரு மண்டலவி ழாவுமணி
ஆன வடமலை யாரமும்—ஞானவொளி
300. அன்னையுடை யாட்கரத்ன வங்கியு மெய்யன்பை
முன்னு மறுபத்து மூவரும்—மன்னுகுண
301. சீலனுயர் காவைத் திருமால் வடமலைபூ
பாலன் வகுத்த படிபாரீர்—ஞாலமிசை
302. இன்ன வளனும் புதுமையுமெங் குள்ளவென்
றன்னமனை யாளிருக்கு மந்நிலையில்—மின்னும்
303. மழுவலத்தா னாவுடைய மானிடத்தான் கொன்றை
முழுமலர்த்தார் வேணி முடித்தான்—எழுபரவை

291 - 2. நெற்களஞ்சியமும்.

293. நிருதிதிக்கு - தென்மேற்கு மூலை. முற்ற - முடிய.

294. தேறல் - தேன். 296. வெள்ளிவரை வாகனம் - கைலாயவாகனம்.

297. கனகத்து - பொன்னாலாகிய. 298. கோளரி - சிங்கம்.

300. உடையாட்கு - ஆவுடைநாயகிக்கு.

301. காவை காவனூரென்பதன் மரூஉவென்பர்.

304. ஆல மணிமிடற்று னம்பொன் மணிநெடுந்தேர்
கோலமணி வீதி குறுகுதலும்—நீலவிழி

305. சென்றாள் பணிந்து தியங்கினா ணெட்டுயிர்த்து
நின்று ளயர்ந்தா ணிலைசோர்ந்தாள்—துன்றுபொழிற்

306. கூழைப் பதிவாழ் குழகனே கோட்டுமதிப்
பேழைச் சடைமவுலிப் பெம்மானே—ஏழையேற்

307. கம்புலி யார மழலாய்க் கொதியாமற்
பம்புமொலி யாவி பருகாமற்—கும்பமுனி

308. முன்னு மருந்து படியிந்த முந்நீரோ
டின்னுமருந் தென்ற லிசையாதோ—துன்னுபுகழ்

309. வென்றுபோ ராடிமதன் விற்கரும்பைக் கல்லானைக்
கன்றுபோ லின்றளித்தா லாகாதோ—இன்றுனது

310. சின்னத் துடன்பகைத்தோன் சின்ன மெதிர்பிடித்தான்
என்னத் திருவுளத்துக் கேறாதோ—நின்னிகழித்

311. தாரேனுந் தாராத் தகைமையென்கொ லென்னவிவ்வா
றோரேழ் பருவத் தொளிவளையார்—நேர்போதக்

312. கண்ணுதலான் புன்னைநறுங் காவுடையா னோர்பாகத்
தொண்ணுதலான் போந்தா னுலா.

---

304. நீலவிழி - நீலவிழியையுடைய பேரிளம் பெண்.

306. கூழைப்பதி - சங்கரநயினார் கோயிலின் திருநாமங்களுள் ஒன்று. பேழைச்சடைமவுலி - பேழைப் பெட்டிபோலும் சடைமுடி; "பேழைச் சடையர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே" (தே. சுந்த. கடவூர் மயானம்); பேழை - ஒருவகைப் பெட்டி.

307. அம்புலி ஆரம் - சந்திரனும் முத்து மாலையும். ஒலி - கடலொலி. கும்பமுனி - அகத்தியமுனிவர். 308. அருந்து படி - உண்டபடியே.

307-8 முந்நீரோடு அம்புலியையும் ஆரத்தையும் அருந்தென்று கும்ப முனிக்குக் கூறல் உமக்கு இசையாதோ. கடலினையுண்டால் அம்புலியும் முத்தும் அதனொலியும் இராவென்றபடி. கடலிற்றோன்றுதலால் அம்புலியையும் உடன் கூறினார்.

309. விற்கரும்பைக் கல்லானைக்கு அன்றுபோல் நீர் அளித்தால் ஆகாதோ.

310. சின்னம் - சிவசின்னம், காளம் (குயில்.)

312. ஒண்ணுதல் - உமாதேவியார்.

உ

# செய்தித் திரட்டு.

**காஞ்சீபுரம்:**— மாசி ௧௧௳ மகா சிவராத்திரிதினம் மாலை ௫ மணிக்கு ஏகாம்பரநாதர் சன்னிதி வீதியில் ஸநாதனிகளின் கூட்டம் கூடிற்று. பரமேசுரன் ஆலாலத்தை யுண்டு உலகத்தைக் காத்த தினமாதலால், அவ்வாறே ஸநாதன தர்மத்தைக் காப்பாற்றுவாராக! என்று பிரமஸ்ரீ வளையாற்றூர் கிருஷ்ண சாஸ்திரியார் பிரார்த்திக்கச் சபையோர் கைகூப்பி யிறைஞ்சினர். ஆந்திர மகாசபைத் தலைவர் ஸ்ரீமான் D. S. வாசுதேவ ஐயர் தலைமை வகித்தனர். ஸநாதனதர்ம சேவாசங்கக் காரியதரிசி திரு. இராமச்சந்திர சர்மா அவர்கள், "ஆலயப் பிரவேசாதி விஷம மசோதாக்களை யெதிர்க்கவேண்டும். ஒரு காந்தி பட்டினி கிடக்கிறா ரென்றாவது, சாகுந் தருவாயி லிருக்கிறா ரென்றாவது, அவர் பக்கத்தாரின் வீண் கூக்குரலுக்குப் பயந்துவிடப் படாது. 1858-ம் வருடம் மாட்சிமை தங்கிய விக்டோரியா மகாராணியார் செய்த மதநடுநிலைமை வாக்குறுதி வீணாகப் படாது. சட்டசபை அங்கத்தினர்கள் தர்மசாஸ்திர விரோதமாய்ப் பேசப் படாது. பொதுவுடைமைக் கட்சி, சுயமரியாதைக் கட்சி யென்னும் போலிக் கொள்கைகளைப் பரவவிடாது அடக்கவேண்டும். அரசாங்கத்தார் நடுநிலை தவறாது ஸநாதன தர்மத்தைக் காப்பாற்றி நீடுவாழ்க!" எனக் கூறிமுடித்தார். அவைகளைக் கனம் கவர்னர்ஜனரல் அவர்கள், இந்திய ஜனத் தலைவர்கள், பத்திரிகாசிரியர்கள் ஆகியவர்களுக்கு அனுப்பத் தீர்மானிக்கப்பெற்றது. திரு. G. இராமநாத சாஸ்திரியார் தெய்வமேத்த, ஜகத்குரு சங்கராசாரிய சுவாமிகளின் உபதேசமொழிகளாகிய "வர்ணாச்சிரமதர்மம்" என்னும் புத்தக விநியோகம் செய்யப்பெற்றது.

**மயூரவாகன சேவனத் திருநாள்:**—மகாதேசோ மண்டலகுரு பாம்பன் உயர்திரு குமரகுருதாச சுவாமிகள் நடத்திவந்த இத் திருநாள், இவ்வாண்டு மார்கழி ௯, ௧௦௳களில் திருவான்மியூர்த் தியாகேசர் ஆலயத்துக்கு வடபால் நிலவும் மயூரபுரத்தில் மகாதேசோ மண்டலத்தாரால் குருசுவாமி சந்நிதானத்தில் ஒன்பதாவதாண்டு கொண்டாடப் பெற்றது. முதல் நாள் மாலை அபிடேகமாகி, இரவு விருதுகள் சோடசோபசார அலங்கார ஆராதனங்களுடன் சந்நிதியினின்றும் காங்கேயநல்லூர் உயர்திரு கிருபாநந்தவாரியவர்களும், பிற அடியார்களும் திருப்புகழ்ப் பாராயணம் செய்துவர, தியாகேசர் மாடவீதி வலமாகச் சந்நிதி சேர்ந்து, புராணிகர் திரு. கோவிந்தசாமிபிள்ளை யவர்களால் அசோகசாலவாசம் ஓதப்பெற்றது. இரண்டாம் நாள் காலை விசேடபூஜையும், நண்பகல் மகேசுவர பூஜையும், மாலை ச. சச்சிதானந்தம் பிள்ளை, திரு. வி. கலியாணசுந்தர முதலியார், காஞ்சி நாகலிங்க முனிவர் ஆகிய திருவாளர்கள் முறையே குருபக்தி, சாமிநாதன், அருணகிரிநாதர் என்னும் சொற்பொழிவுக ளாற்றினர். முனிவர் உரையாடலில், அருணகிரிநாதர் திருவருணையில் செங்குந்தர் மரபில் சிவபக்தி அடியார் பக்திகளிற் சிறந்து இல்லற நடாத்திய மூதண்ட முதலியாருக்குக் கற்புடைய முத்தம்மையார்பாற் பிறந்த அருந்தவப் புதல்வரே என நிருபித்தனர்.

**உபய ஊழியன்:**

முதலாவது "ஊழியன்" வாரத்தாள்—இதன் ஆசிரியரும் சொந்தக் காரரும் திரு. ராய. சொக்கலிங்கனார்.

இரண்டாவது "ஊழியன்" திங்கட் டாள்—இதன் ஆசிரியரென்பார் பாலையப்பட்டி திரு. ராம. சுப்பிரமணியன் செட்டியார். இதனை அச்சடித்து வெளியிடுபவர் "குமரன்" ஆசிரியர் திரு. சொ. முருகப்பனார்.

முதலாம் அவர் வாதியாகவும், இரண்டாம் இருவர் பிரதிவாதிகளாகவும் தேவகோட்டை முன்ஸீப் கோர்ட்டில் ஒரு வழக்கு நடக்கிறது.

வாதி தான் சிறையை விட்டு வெளிவருதற்கு ஒருமாத முன்,ஐப்பசியிலிருந்து தன் பத்திரிகையின் பெயரையே கொண்டு பிரதிவாதிகள் பத்திரிகை நடத்துவது, தனது பத்திரிகையின் உரிமையைப் பாதிக்கக் கூடியதாய்—தனக்கு நஷ்டம் ஏற்படக்கூடியதாய் இருப்பதால், இரண்டாவது ஊழியனை நிறுத்தவும், தனக்கு நஷ்ட ஈடு கிடைக்கவும் வேண்டுகிறார்.

பிரதிவாதிகள், "ஊழியன்" என்ற பெயர் ஒருவர்க்குத் தனி உரிமையாகாது. யாவர்க்கும் பொதுவே யாதலால், வாதிக்கு யாதொரு பரிகாரமும் கிடைக்கத்தக்கதில்லை என்கின்றனர்.

*பத்திரிகைகளின் பெயர்களெல்லாம் பொதுப் பெயர்களே யாதலின், ஒரே பெயரைப் பல பத்திரிகைகள் தாங்கினால் மயக்கமுறாதா? என்பதே நோக்கற்பாலது.

**பெரிய புராணப் பிரசங்கம்:**— தை-உஅ௳ முதல் காரைக்குடி நகரச் சிவன்கோவிலில், திரு. பா. சிதம்பரநாத பிள்ளை யவர்களால், பிரதிதினமும் மாலை 7 மணி தொடங்கி நடைபெறுகிறது.

**தேநீர் விருந்து:**— திருப்புத்தூர் தாலூகாபோர்டுக்குத் தலைவரான திருவாளர் க. வீ. அள. ராம. இராமநாதன்செட்டியாரவர்களைப் பாராட்டி ௸ தாலூகாபோர்டு உத்தியோகஸ்தர்களால் காரைக்குடி மீனாட்சிசுந்தரேசர் வித்தியாசாலையில், தேவகோட்டை சப்கலக்டர் மகா-ள-ள-ஸ்ரீ R. M. சுந்தரம் அவர்கள் தலைமையில் குதூகலத்துடன் நடைபெற்றது.

**பரிமணங்குடி:**— ஸ்ரீ ஷண்முகநாத சுவாமி கோயிலில் தை உஉ௳ கார்த்திகைநாள் விநாயக வழிபாடாற்றி கொடியேற்றி, உஅ௳ பூசத் திருநாளில் எருதுகட்டும், இரவு தெய்வகுஞ்சரி திருமண வைபவமும்,மாசிமீ உ௳ வேல் செடில் சகடை முதலியன தரித்துப் பால் பனிநீர் விபூதி சந்தனங்கள் தாங்கித் தழல் விளையாடி வந்த காவடிகளின் அபிடேகங்களும் தீர்த்தவாரியும், இரவு மயில்வாகனருடத் திருவுலாவும், ஒவ்வொரு நாளும் மேளதாள சர்வாடம்பரங்களுடன் வாகனாதிகளில் திருவுலாவும், மடாலயத்தில் ஸ்ரீ பரமகுரு சுவாமிகள் குருபூஜையும், சைவ சன்மார்க்க சங்கத்தில் தமிழ்மறை முழங்க சைவப் பெரியார்களால் ஆத்திகப் பேருரைகளும், சிறப்பாகச் சிவபுண்ணியசீல தனவணிக மணிகளின் பொருளுதவியைக்கொண்டு ௸ தேவஸ்தான உரிமையாளராகிய திரு. மு. முத்துப்பிள்ளை யவர்களால் இனிது நடாத்தப் பெற்றன. ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு சேட்டின்புற்றனர்.



**ஞானியார் சுவாமிகள்:**— சென்ற சில மாதங்களாகச் சுகவீனமாயிருந்த திருப்பாதிரிப் புலியூர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் வலது காலில் ஏற்பட்டிருந்த என்பு முறிவு சுகப்பட்டுப் பழையபடி நடக்கிறார்கள் என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம். அடுத்த வைகாசி மாதம் 27௳ (9-6-33) வெள்ளிக்கிழமை மூலத் திருநாளன்று சுவாமிகளின் அறுபதாண்டு நிறைவுத்திருநாளை அன்பர்கள் கொண்டாடுவார்கள்.

**காந்திஜியின் தூர்க்குணங்கள்:**— அமெரிக்காவிலுள்ள சிகாகோ நகரத்தில் மௌலானா ஷவுக்கத்தலி ஒரு பிரஸங்கத்தில் கூறிய காந்திஜியின் தவறுதல்களில் சில:—

"காந்திஜி பார்வைக்குப் பெரிய மனிதனாகத் தோன்றாவிட்டாலும் ஸ்திரீகளை மட்டும் ஸ்வசம் செய்துகொள்வதில் ஒரு சாமர்த்தியம் வாய்ந்தவர். வியாபாரத்தில் வெகு கெட்டிக்காரர். அவருக்குச் சிறிதளவு காரியங்களை ஏதோவொரு விதமாய் நடத்த சக்தியுண்டு. ஆனால், அவரிடம் இரண்டு தவறுகள் உண்டு. அவர் விளையாட்டுக் குழந்தையைப் போல் சில சமயத்தில் சுலபமான காரியங்களைக் கஷ்டமான காரியங்களாகச் செய்து ஜனங்களுக்கு ஸங்கடத்தை உண்டுபண்ணி விடுகிறார். சீரான வழியில் செல்லுபவர்களை கரடுமுரடான வழிகளில் திருப்பிவிடுகிறார். ஜனங்கள் நிதானமாக வேலை செய்யவேண்டிய காலத்தில் அவர் ஜனங்களை ஒன்றும் செய்ய முடியாமல் தடுக்கும்படி செய்துவிடுகிறார்.

இந்தியாவிலேற்பட்டுள்ள அபிப்பிராய பேதங்களுக்கெல்லாம் ஒருவருடைய நன்மையைத் திறமையுள்ள மற்றொருவர் கைப்பற்ற முயற்சிப்பது தான் காரணமாகும். இவர் முதலில் ஆரம்பித்த ஒத்துழையாமை இயக்கம் வெற்றிகரமாக நடந்ததற்கு எங்களுடைய உதவியே காரணம். இப்போது நாங்கள் அவரை விட்டுப் பிரிந்ததால்,புது அரசியலில் சில முக்கிய அம்சங்களில் எங்களுக்குள் சச்சரவு எற்பட்டுவிட்டது.

**டாக்டர் அம்பேத்கார்:**—தீண்டாதவர் ஆலயப்பிரவேச விடயத்தை எதிர்ப்பவர்களே பெரும்பான்மையாக இருக்கிறார்கள். குருவாயூர் பொது ஜன வாக்கைக் காட்டலாம். காந்தியின் உயிரைப் பந்தயமாய் வைத்து எடுக்கப்பட்ட அந்த ரெவரன்ஸை நான் ஒத்துக் கொள்ள முடியாது.

**அரசியல் அறிக்கை:**— 1933-ஸு மே-மீ 13௳ யோடு உபகாரச்சம்பளம் பெற்று வேலையிலிருந்து விலகும் சென்னை ஹைகோர்ட் ஹானரபிள் ஜட்ஜ் ஸர் எட்வர்ட் ஹாமில்டன் வாலன்ஸ். I. C. S. அவர்கள் ஸ்தானத்திற்கு, மிஸ்டர் ஹரோல்ட் பார்டுவெல் I. C. S. அவர்களை நியமிக்க மன்னர்பெருமான் அநுமதித்துள்ளார். (போர்ட்ஸெண்ட் ஜார்ஜ் கெஜட் 21-2-1933.)

## அஷ்டபந்தன மருந்து.

சிவாகம முறைப்படி ஊமத்தநாட்டுக் குருக்களையா செய்த இரண்டுசேர் எடையுள்ள வில்லை ஒன்றுக்கு விலை ரூபா 4 வீதம், காரைக்குடித் திருவாளர் ராம. உ. இராமசாமி செட்டியா ரவர்களிடம் பெறலாம்.

ஆத்தங்குடி:— ஸநாதனதர்ம மகாசபை மாசி-யீ௴ கூடியது. "சிவநேசன்" உதவியாசிரியர் திரு. சுவாமிநாத பிள்ளை தலைமை வகித்தனர். திருவாளர்களான.—சக்கரவர்த்திஐயங்கார், மணவாளையங்கார், கல்யாண சுந்தர கனபாடிகள், குன்றக்குடி சுப்பிரமணிய சாஸ்திரிகள், சு. வீர. கதிரேசச் செட்டியார், திருவேங்கடமையங்கார் ஆகியவர்கள் ஸநாதனதர்மத்தைப்பற்றியுரையாடி, ஆலயப் பிரவேசாதி ஐந்து(பாதக)மசோதாக்களை அரங்கேறவொட்டாது தடுக்க வேண்டுமெனத் தீர்மானித்து, அதை இராஜப்பிரதிநிதியவர்களுக்குத் தந்தி மூலமும், இந்தியாமந்திரியவர்கட்கு ஆகாயவிமானமூலமும் அனுப்பப் பெற்றது. தலைவர் தக்கமேற்கோள்களுடன் ஆழ்ந்தகருத்துக்க ளடங்கிய நல்லுரைகளால் சபையோர்க்கு மகிழ்வூட்டினர்.

திருநாவலூர்:— ஸ்ரீ நம்பியாரூர வள்ளல் திருவவதரித்த இத் திருத்தல சிவாலயத்திற் புராதன ஆகமா யமைந்த, அகிந்திதா கமலினீ சமேத ஆலால சுந்தர சுவாமியின் மூலஸ்தான மூர்த்திகளுக்கு அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக கைங்கரியம், தை ௧௮௳ தேவகோட்டைத் திருவாளர் ராம. அரு. அரு. ராம அருணாசலஞ் செட்டியா ரவர்களின் புண்ணியப் பொருளுதவியாலும், கோட்டையூர் அன்பர் வே. நா. இலக்ஷ்மணஞ் செட்டியா ரவர்களது முயற்சியாலும், உள்ளூர்த் தலவாசிக ளுழைப்பினு லும் மிக்க சிறப்புடன் நடைபெற்றது.

பிற்பகலில் அதனங்கமாகத் திருவாமாத்தூர் கௌமார மடாலயம் திருவாளர் தி. மு. செந்தினயகம் பிள்ளை யவர்கள் அரிய பஞ்சரத்தினப் பனுவல் இயற்றி அரங்கேற்றி, அடியிற்கண்ட காலவிளக்கக் கவியொன்றுங் கூறினர். செந்தமிழ்ச் செல்வர்களாகிய காஞ்சீபுரம் பொன்னுச்சாமி முதலியார், விருத்தாசலம் பெரியசாமிப் பிள்ளை முதலானவர்கள் சொற்பொழிவாற்றினர். இரவு உபயதேவியர் சமேத ஆரூரது அற்புதத் திருவுலா அன்பர்க ளுள்ளத்தை ஆனந்தமுறச் செய்தது.

காலவிளக்க வெண்பா.

ஆங்கீ ரசமகரத் தார்பதினெட் டாமதிநா
ளங்கீர்நற் சுந்தரற்குச் சீர்நாவற்—பாங்கீடார்
தேவையரு ணாசலப்பேர்ச் சீலர்சம்பு ரோட்சணஞ்செய்
தோவருமின் புற்றா ருவந்து.

நமக்குவந்த கடிதம்:— அன்புமிக்க ஐயா! உங்களைப்போன்ற நல்லோர்களின் ஆசிர்வாதத்தால் நாங்கள் எங்களின் துணைவிகளுடன், ஆங்கீரச தை ௧௯௳ திங்கட்கிழமை காரைக்குடியிலிருந்து புறப்பட்டு, ௨௯௳ நாகையில் கப்பலேறி, ௨௮ காலை பினங்கு வந்து, அங்கிருந்து புறப்பட்டு பல ஊர்களைப் பார்த்துக்கொண்டு மாசி ௯௳ மாலை 5-30-க்கு சிங்கப்பூருக்குச் சௌக்கியமாய் வந்துசேர்ந்தோம் என்பதை மிகச் சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

உங்கள் பக்ஷத்தைக் கனவிலும் மறவாத
ஆறு. ஆ. ராம. சொக்கலிங்கம்.
மெ. சு. கி. தண்ணீர்மலையான்.

---

186925

# செய்தித்திரட்டு.

மகாமக மகத்துவம்:— கும்பகோணத்தில் மாசி ௧௮௳ முதல் ௨௭௳ வரை வெகு சம்பிரமமாக நிறைவேறியது. இலட்சக் கணக்கான ஜனங்கள் வந்து புண்ணிய நீராடிப் புனித முற்றனர். ஒவ்வொருவரும் துக்க நிவர்த்தியுடன் தூய சிந்தையினராய் மன வெழுச்சி பெற்று விளங்கினர். சிவகணங்களே நிறைந்து சிவானந்த வாரியிற் றிளைத்தாற்போலக் கும்பகோண நகரமானது மிகப் பொலிவுடன் விளங்கியது. ஒருங்கிய மனத்தோடு ஒவ்வொருவரும் உவந்து நீராடும் பெருமை கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணரும் பான்மையதாகும். பரதகண்டத்துப் பல பாகங்களிலிருந்தும் பக்திமான்களும், சைவ வைணவ ஸ்மார்த்த மடாதிபதிகளும் குறுநில மன்னர்களும், பல பாஷாவிற்பன பண்டிதர்களும் நிரைநிரையாக வந்து மக நீராடி மனநிறை வெய்தினர். ஆங்காங்கு சமயம், சநாதனதர்மம், கடவுட் பிரபாவம் ஆதிய ஆஸ்திகப் பேருரைகள் நிகழ்ந்தன. பேரொளிப் பிழம்பின்முன் காரிருள் இரிதல் போல, ஆஸ்திகப் பெருங் கூட்டத்தினிடையே நாத்திகக் குழுக்கள் நடமாட்டத்திற் கிடமில்லாமற் போயிற்று. தஞ்சை ஜில்லாக் கலக்டர் உத்தரவு, சநாதன விரோதிகளையும் நாஸ்திகர்களையும் சமய சம்பந்தமில்லாத பிற கூட்டங்களையும் தலைகாட்ட வொட்டாது தடுத்தது. நகர பரிபாலன சபையார் ஆங்காங்கு பல கொட்டகைகளும், குழாய்க் கேணிகளும், கக்கூஸ்களும் அமைத்து உடனுக்குடன் தெருக்களைச் சுத்தஞ் செய்வித்து, இன்னும் வசதிகள் பலவும் செய்திருந்ததைப்பற்றி, அச் சபையாரையும், அச் சபைத் தலைவர் மகா-ௗ-ௗ-ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் அவர்களையும், மக்களுக்கு யாதோ ரிடையூறின்றிப் போதிய பாதுகாப்புகள் செய்து நிர்வகித்த போலீஸாரின் திறமையையும், வண்டிகளை மாறாது விட்டு, சீட்டு வாங்குதல் ஏறி யிறங்குதல் ஆதியவைகளில் யாதொரு சிரமமுமின்றிச் சாதாரண காலத்தைப்பார்க்கிலும் சௌகரியமான முறையில், ஜனங்களின் போக்குவரத்துக்கு மிக்க வசதி செய்த ரெயில்வே டிபார்ட்மெண்டின் நிர்வாகத்தையும், மக்கள் மனதாரவாழ்த்திப் பாராட்டினர். ஆங்காங்கு உணவுச்சாலைகளும், அன்னதானங்களும், பொருட்காட்சிச் சாலைகளும், சங்கீதங்களும், திருவுலாவாதிய சிறப்புக்களும் மக்கட்குத் தாபத்தைத் தீர்த்து இன்பூட்டின. மகாமகக் குளத்தில் கங்கையாதிய நவதீர்த்தங்கள் பொங்கிவரும் இப் புண்ணியப் பெருநாள் எண்ணிறந்த காலங்களாக இனிது நடைபெற்றுவருவது, ஸ்காந்தம் முதலிய புராணங்களில் கூறும் தலமகாத்மியத்தினாலும், தேவாரத் திருவாக்கினாலும் ஆய்ந்துணரற்பாலதாம்.

காந்திகொள்கை:— கொழும்புப் பட்டினத்தில் தீண்டாதார் கோயிற்பிரவேச முயற்சி, பொய்யாய்ப் பழங் கதையாய்க் கனவாய் மெல்லப் போய்விட்டது. இந்நாள் இதைப்பற்றி ஏதும் பேசுவாரைக் காணோம். இந்தியாவிலும் இப் பிரவேச விஷயமாகக் காந்திஜிக்கும் ஏனைய ஜனத்தலைவர் சிலருக்கும் அபிப்பிராயபேதம் ஏற்பட்டன. தீண்டாதார் கோயிற்பிரவேசத்தைக் கட்டாயப்படுத்த அரசினரைக்கொண்டு ஒரு பிரமாணம் நிறைவேற்றவேண்டு மென்பது காந்தியாரின் முனைப்பு. எதிலும் ஒத்துழையா விரதம் பூண்ட நாம், இதில் மாத்திரம் ஒத்துழைப்பது பெருந்தவறும் விரத பங்கமும் ஆகும் என்பது பண்டித மதன்மோஹன மாளவியா முதலானோர் கொள்கை. இந் நியாயம்பற்றி முன்னரேச் சிறையிலிருந்த சிலர் அரசினர்பால் மன்னிப்புப் பெற்று வெளிவரலாயினர்.